பக்கங்கள்: 12
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | தை 05 | சனிக்கிழமை 19.01.2019 | கதிர் 75

### இது ரகசியம் அல்ல!

நேற்றுக் கொழும்பில் நின்றமையால் கொழும்பு அரசியல் தலைவர்களோடு ஊடாடி ஏதேனும் செய்தி பெறலாம் என்று துளாவினேன்.

காலையில் நேரத்துடன் வந்தால் பேசலாம் என்று அழைத்தார் எதிர்க் கட்சித் தலைவரான மஹிந்த ராஜபக்ஷ.

பக்கம் 02

# ரணில் - சம்பந்தன் - சுமந்திரன் தமிழர்களை ஏமாற்றுகின்றனர்!

## மஹிந்த ராஜபக்ஷ காட்டம் நேற்று அவர் விசேட செவ்வி



கொழும்பு, ஜனவரி.19

“தொத்துப் பொறியில் அல்லாடும் இந்த அரசின் கீழ் புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படும் என்பது அசாத்தியமானது. அப்படி ஒன்று நடக்கும் என சம்பந்தனும் சுமந்திரனும் கனவு காண்கின்றார்களோ எனக்குத் தெரியாது. ஆனால் ரணில் விக்கிரமசிங்க, சம்பந்தன், சுமந்திரன் ஆகிய மூவரும் சேர்ந்து அப்படி ஒரு புதிய அரசமைப்பு வரப் போவதாக நம்பிக்கையூட்டி தமிழ் மக்களை ஏமாற்றுகின்றார்கள் என்பது நிச்சயம்.

இப்படித் தெரிவித்திருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ. நேற்று ‘காலைக்கதிர்’ நாளிதழுக்குத் தாம் வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

பக்கம் 11

## சுமந்திரன் மீது ‘பெயின்ட்’





யாழ்ப்பாணம், ஜன. 19

வடமராட்சிப் பகுதியில் அரச அபிவிருத்தித் திட்டத்துக்கு வைக்கப்பட்டு இருந்த பதாகையில் காணப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

பக்கம் 11

## தேர்தலை எதிர்கொள்ள அஞ்சுகின்றது ஐ.தே.க.

### தயாசிறி கூறுகிறார்

கொழும்பு, ஜன. 18

எதிர்வரும் தேர்தல்களை எதிர்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அச்சம் கொண்டிருக்கிறது என

பக்கம் 11

## மகாநாயக்கர்களின் அனுமதி பெற்றே புதிய அரசமைப்பைத் தயாரிப்போம்

### ரணில் தலைமையிலான அரசு உறுதி



கொழும்பு, ஜன. 19

புதிய அரசமைப்பைத் தயாரிப்பதற்கு முன்னர் பௌத்த மகா பீடங்களின் அனுமதியைப் பெற்றுக்கொள்வோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்

பக்கம் 11

## வடக்கில் 1,201 ஏக்கர் காணிகளை திங்களன்று ராணுவம் விடுவிக்கும்

கொழும்பு, ஜன. 19

வடக்கில் ஆயிரத்து 201 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவுள்ளன என்று இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

தேசிய பாதுகாப்புக்குப் பாதிப்பில்லாத

பக்கம் 11

## சமஷ்டிக் குணாதிசயங்களுடன் வரவே வராது புதிய அரசமைப்பு

### ஒற்றையாட்சியேதான் என ரணில் அம்பலப்படுத்திவிட்டார் பழைய கூற்றை மீண்டும் உறுதிப்படுத்துகின்றார் தவராசா

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுவதைப்போல்சமஸ்டிக்குணாம்சங்களுடன்கூடியபுதியஅரசமைப்பு வரப்போவதில்லை. ஒற்றையாட்சி அரசமைப்பே மீண்டும் வரப் போகின்றது என்பதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசமைப்புப் பேரவையில் ஆற்றிய உரை அம்பலப்படுத்தியுள்ளது.

இவ்வாறு தான்

பக்கம் 11

## கூட்டமைப்புடன் இணைந்து பணியாற்ற நாங்கள் தயார்

### மஹிந்த தரப்பினர் அறிவிப்பு

கொழும்பு,ஜன.19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து பயணிக்கத் தமது தரப்பு தயராக உள்ளதாக எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்

பக்கம் 11

## எதிர்க்கட்சித் தலைவர் செயலகத்தில் மஹிந்த



கொழும்பு, ஜன. 19

எதிர்க்கட்சி தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றார். கொழும்பிலுள்ள

பக்கம் 11

## கூட்டமைப்பின் பிரதிநிதியாக சுமந்திரனை ஏற்கமாட்டோம்!


### கூறுகின்றார் எஸ்.பி. திஸாநாயக்க



கொழும்பு, ஜன. 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை, ஒருபோதும் கூட்டமைப்பின் பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று சுதந்திரக்

பக்கம் 11



## உலகின் தொன்மை மிக்க தமிழை அவமதிக்கும் நோக்கம் கிடையாது!

### அமைச்சர் மனோவிடம் சீனத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 19

இலங்கை மக்களுடனான எமது உறவு சிங்களம் பேசும் மக்களுடன் மட்டுப்படுத்தப்பட்டதல்ல.

பக்கம் 02

# இந்திய மீனவர்கள் 9 பேர் எச்சரிக்கப்பட்டு விடுதலை

யாழ்ப்பாணம், ஜன. 19

நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 9 மீனவர்களுக்கும், 5 ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து மீனவர்களைக் கடுமையாக எச்சரித்து ஊர்காவற்துறை நீதிமன்று விடுவித்தது.

நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 9 தமிழக மீனவர்களைக் கடற்படையினர் கடந்த 13ஆம் திகதி அதிகாலை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட மீனவர்களை அன்றையதினம் மாலை கடற்படையினர் யாழ்.மாவட்ட நீரியல் வளத்துறையினரிடம் ஒப்படைத்தனர். அவர்கள் அன்று மாலை ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் அ.ஜூட்சன் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

அதனை அடுத்து மீனவர்கள் 9 பேரையும் விளக்கமறியலில் தடுத்து வைக்க நீதிவான் உத்தரவிட்டார். இந்த வழக்கு நேற்று ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் அ.ஜூட்சன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, 9 மீனவர்களையும் கடுமையாக எச்சரித்த நீதிவான், 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

அதேவேளை , மீனவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட படகுகளின் உரிமையாளர்கள் படகுகளின் ஆவணங்களுடன் எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி மன்றில் முன்னிலையாகவேண்டும் என நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

தவறும் பட்சத்தில் படகுகள் அரசுடமையாக்கப்படும் என நீதிவான் அறிவித்தார். (ஐ-07)

# வவுனியா சிறைச்சாலை கைதி வைத்தியசாலையில் மரணம்

வவுனியா சிறைச்சாலை கைதி ஒருவர் வவுனியா பொதுவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று மாலை மரணமடைந்துள்ளார். ஹெரோயின் கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு வவுனியா சிறைச்சாலையில் சிறைவாசம் பெற்று வந்த கொழும்பு மருதானையை சேர்ந்த கேசவன் சசிகுமார் (வயது–41) என்பவரே நேற்று மதியம் ஒரு மணியளவில் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவர் சிகிச்சை பலனின்றி நேற்று மாலை உயிரிழந்தார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-100)

# வடக்கில் கடும் குளிர்!

வடக்கில் குளிரான காலநிலை மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கும் என்றும், இதன்போது சுவாசம் தொடர்பான நோய்கள், உடலில் அசௌகரியங்களும் ஏற்படும் எனவும், இதனால் குளிரைத் தாங்கக் கூடிய உடைகளை அணிந்திருக்குமாறும், எச்சரிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் பெரும்பாலான பகுதிகளில் அதி குறைந்த வெப்ப நிலையின் அளவு 18.5பாகை செல்சியஸாகக் காணப்பட்ட அதேவேளை அதி கூடிய வெப்பநிலை 29 பாகை செல்சியஸாகக் காணப்பட்டது. அடுத்து வரும் தினங்களுக்கும் இதே நிலைமை தொடரும். பனிப்பொழிவு மாலை 4 மணிக்கு ஆரம்பிக்கின்றது. மறுநாள் காலை 7.30 மணிவரை தொடரும். இதனால் இரவு மற்றும் அதிகாலை வேளைகளில் நடமாடும் போது கடும் குளிரைத் தாங்கக் கூடியவாறு பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வது சிறந்தது.

கடுமையான வெப்பநிலை வீழ்ச்சியின் காரணமாக ஏற்படுகின்ற தீவிர குளிர் வானிலை நிலைமை சுவாசம் சம்பந்தமான நோய்களுக்கும், மனித உடற் சௌகரியத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். விலங்குகளிலும், தாவரங்களிலும், குறிப்பாக பயிர்ச்செய்கை நடவடிக்கைகளிலும் இதன் தாக்கம் காணப்படும்.

இந்த நிலைமை இரண்டு வாரங்களாவது நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால், பாதுகாப்பாக இருப்பது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தடுக்க உதவியாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏழுமணிக்குப் போனால் ஆள்கள் இருக்காது, தனியே பேசலாம் என்று எண்ணியிருந்த எனக்கு ஏமாற்றமாக இருந்தது. அவரின் விஜேராம உத்தியோகபூர்வ இல்லம் ஜேஜே என்றிருந்தது.

வாசலில் என் பெயர் கூறியிருப்பார் போலும். எந்தவித சோதனை, தடுமாற்றங்கள் இன்றி உள்ளே வரவேற்பறைக்கு கூட்டிச் சென்று அமர வைத்தனர். நான் மட்டும் தான் வீட்டு வரவேற்பறைக்குள். உதவியாளர்கள்தான் அங்குமிங்கும் ஓடித் திரிந்த வண்ணம் இருந்தனர்.

வீட்டுக்கு வெளியே மூன்று பக்க வராந்தாக்களிலும், நீண்ட அகன்ற முற்றத்திலும் திருமணக் குழுக்கள் கோர்ட் சூட்டுடன் காணப்பட்டன. என்னவென்று விசாரித்தேன்.

நேற்றுக் காலை ஒரு மணி நேரத்துக்குள் மூன்று திருமணப் பதிவுகள், இரண்டு பிறந்த நாள் நிகழ்வுகள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு அறையில் அல்லது வெவ்வேறான வராந்தாக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அப்போது வரவேற்பறைப் பக்கம் வந்தார் மஹிந்தர். உடற்பயிற்சி உடுப்பில் இருந்தார். ஜிம் முடித்து வந்திருப்பார் போலும். *"கொஞ்சம் பொறுங்கள். இதோ வந்துவிடுவேன்."* என்றார்.

பதினைந்து நிமிடத்தில் வெள்ளை வெளேர் உடுப்பில், சிவப்பு நிறத் துப்பட்டா சால்வையுடன் வரவேற்பறைக்கு வந்தார். ஒரு ஐந்து நிமிடம் குசலம் விசாரிப்புகள் நடந்தன. *'என்னவாம் சுமந்திரன்? தொலைக்காட்சியில் பல செய்திகள் போகின்றனவே...?"* என்றார்.

வடக்குப் பத்திரிகைச் செய்திகள் பற்றி எல்லாம் தாராளமாக அறிந்திருக்கின்றார் என்பது தெரிந்தது.

*"விமானத்தில் வந்திறங்கிய அன்டன் பாலசிங்கம் அங்கிருந்து கிளிநொச்சி போக முன்னர் விமான நிலையத்தில் அவருடன் பேசுவதற்கு உமக்கு மட்டுமே ஒழுங்கு செய்து கொடுத்தேன். அப்போதே நீர் யார் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் எல்லோரும் எமக்குத் தேவை."* என்றார் அவர்.

*"இல்லையே. என்னை உங்கள் சகா (உங்கள் ஆள்) என்கின்றார்களே...!"* என்று சிரித்தேன் நான்.

*"ஆள்களை எடை போடத் தெரியாதவர்கள்!"* என்று சிங்களத்தில் ஒரு குறிப்புக் கூறினார்.

*"கொஞ்சம் பொறுங்கள். பக்கத்து அறையில் ஒரு பிக்கு இருக்கிறார். அவருடன் பேசிவிட்டு இந்தக் கல்யாணப் பார்ட்டிகளை முடித்துவிட்டு வருகிறேன். ஒன்றாக அமர்ந்து பேசிக் கொண்டு காலை உணவு அருந்தலாம்"* என்றார்.

மாறி மாறி ஒவ்வொரு திருமண நிகழ்விலும் கலந்து கொண்டார் மஹிந்த ராஜபக்ஷ. தங்கள் வீட்டுத் திருமண நிகழ்வில் கலந்து கொண்டு, திருமணப் பதிவில் சாட்சி ஒப்பமிட வேண்டும் என அவரின் ஆதரவாளர்கள் பலரும் கோரினார்கள் என்பதற்காக அவை அனைத்தும் அவர் வீட்டிலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அவற்றுக்குப் பக்கத்திலேயே விருந்து ஏற்பாடுகளும் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக இருந்தன. பம்பரமாகச் சுற்றி ஒவ்வொன்றிலும் பங்குபற்றினார். சாட்சிப் பதிவுகளில் ஒப்பமிட்டார். பிறந்த நாள் கேக் வெட்டுவதில் பக்கத்தில் நின்று வாழ்த்தினார். எல்லாத் திருமண குழு மற்றும் பிறந்த தின பார்ட்டிகளுடனும் குறுப் குறுப்பாக நின்று சளைக்காமல் சிரித்த முகத்துடன் படத்துக்குப் போஸ் கொடுத்தார்.

ஒவ்வொரு தரப்புடனும் ஐந்து, பத்து நிமிடம் செலவிட்டுவிட்டு மீண்டும் வரவேற்பறைக்கு வந்தார். என்னைக் கூட்டிக் கொண்டு சாப்பாட்டு மேசைக்குப் போனார்.

சாப்பாட்டு மேசை நிறையப் பல்வேறு அயிட்டங்கள். வெளிக்கிழமையான நேற்று அசைவங்களும் தாராளமாக இருந்தன. ஆனால் அது எவற்றையும் அவர் தொடவில்லை. வெறும் பால்சோறும் சம்பலும்தான் சாப்பிட்டார். விருந்தினரை உபசரிப்பதில் கவனம் காட்டினார். சாப்பாட்டு மேசையில் சேர்ந்து சாப்பிட்டபடி பேட்டி எடுத்தேன்.

இரண்டு விடயங்கள் என் மனதில் பட்டன.

ஒன்று – தெற்கில் மஹிந்த என்ற தோற்றத்துக்கு இருக்கும் சக்தி. அலரி மாளிகையில் பிரதமரணிலிடம் இப்படித் தேடி வரும் மக்கள் கூட்டம் இல்லை. அவரும் இப்படித் திருமணக் கூட்டங்கள், பிறந்த நாள் குழுக்களை தன் வீட்டிலேயே நடத்துவது குறைவு. கிராமப்புற மக்கள் சாரிசாரியாக மஹிந்தவைத் தேடித் தேடி நாடி வருகின்றார்கள். அவரும் அவர்களை அரவணைக்கின்றார். அவர்களை ஆகர்ஷிக்கும் சக்தி மஹிந்தவிடம் உண்டு. அதே போல் மஹிந்தவுக்காக உயிர் கொடுக்க அவர்களும் தயார் போலபட்டது.

அடுத்தது – யுத்த காலத்தில் எல்லோரையும் கடும் சோதனையின் பின்னர்தான் மஹிந்தவை நெருங்க விட்டனர். அந்தச் சோதனைக் கெடுபிடி ஏதும் அங்கு இப்போது இல்லை. யாரையும் தொட்டுக் கூடப் பார்க்கவில்லை. 'ஸ்கானிங்'கும் இல்லை. எல்லோருடனும் நெருங்கி அளவளாவில் பழகுகின்றார் மஹிந்தர். மறுபக்கம் யுத்தம் முடிந்த பின்னர் இங்கு தமிழர் தரப்பில் சாதாரண எம்.பிக்கும் விசேட அதிரடிப் படைப் பாதுகாப்பும், 'புல்லட் புறூவ் ஜக்கெட்'டும் இன்னும் தேவைப்படுகின்றன. நிலைமை தலைகீழாகிவிட்டது.

பேட்டி முடிந்து புறப்படும்போது என்மனதில் ஒன்று பட்டது.

தெற்கில் இத்துணை செல்வாக்கும், அபரிமித ஆதரவும் மிக்க ஒரு சிங்களத் தலைவருக்கு இந்த நாட்டில் பாதிக்கப்பட்டு பேரவலத்தில் இருக்கும் தமிழர்களுக்கு நீதி, நியாயம் செய்ய வேண்டும் என்ற நேர்மையான எண்ணம் இருக்குமானால் தீர்வு எவ்வளவு சுலபமாக வந்துவிடும்..? ஆனால் அதுதான் மிக முக்கியமாக இங்கு குறைகின்றதே...!

**- மின்னல்-**

## உலகின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்மொழி பேசும் மக்களையும் நாம் எமது உறவு வலயத்தில் வைக்கவே விரும்புகின்றோம். இந்நிலையில், இலங்கையில் இடம்பெறும் சீன அபிவிருத்தி மற்றும் தொழிற்திட்டங்களின் பெயர்ப் பலகைகளில் தமிழ்மொழியை திட்டமிட்டு அவமதிக்கும் நோக்கம் கிஞ்சித்தும் எமக்கு கிடையாது. இனிமேல் சீன நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள் இலங்கையில் அமைக்கப்படும்போது உங்கள் அமைச்சுடன் கலந்து பேசி அவற்றை அமைக்க எங்கள் வர்த்தகப் பிரிவு அதிகாரியை நான் நியமிக்கின்றேன்.

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணி – ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்துசமய விவகார அமைச்சர் மனோ கணேசனிடம், இலங்கையிக்கான சீனத் தூதுவர் செங் யுவான் தெரிவித்துள்ளார்.

சீனத் தூதுவரின் அழைப்பை ஏற்று கொழும்பிலுள்ள அவரது இல்லத்துக்கு அமைச்சர் மனோ கணேசன் நேற்றுச் சென்றார். அமைச்சருடன் அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சந்திரசேகரம், பணிப்பாளர் மதிவதனன் ஆகியோரும் சென்றனர்.

இந்தச் சந்திப்பின்போதே சீனத் தூதுவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இலங்கையில் உள்ள சீன தொழில் முயற்சி திட்ட வளாகங்களில், இலங்கையின் மொழிக் கொள்கை பின்பற்றப்படுவதில்லை. விசேடமாக தமிழ் மொழி புறக்கணிப்புக்கு உள்ளாகின்றது என்ற புகார் சமீப காலங்களில் மேலெழுந்துள்ளது. இவை பற்றி சீனத் தூதுவரைச் சந்தித்து நேரடியாகக் கலந்துரையாட விரும்புவதாக தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சு, கொழும்பில் உள்ள சீனத் தூதரகத்துக்கு அறிவித்தது.

அதையடுத்து, அமைச்சர் மனோ கணேசனை தனது உத்தியோக பூர்வ இல்லத்துக்கு வருகை தரும்படி சீனத் தூதுவர் செங் யுவான் விடுத்த அழைப்பை அமைச்சர் மனோ கணேசன் ஏற்றுக்கொண்டதை அடுத்து இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது சீனத் தூதுவர், அமைச்சர் மனோ கணேசனிடம் கூறியவை வருமாறு:–

இலங்கை மக்களுடனான சீன நாட்டின் உறவு சிங்களம் பேசும் மக்களுடன் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. தமிழ்மொழி பேசும் மக்களையும் எமது உறவு வலயத்தில் வைக்கவே நாம் விரும்புகின்றோம். இந்நிலையில், இலங்கையில் இடம்பெறும் சீன அபிவிருத்தி மற்றும் தொழில் திட்டங்களின் பெயர்ப்பலகைகளில் உலகின் தொன்மையான ஒரு மொழியான தமிழ்மொழியைத் திட்டமிட்டு அவமதிக்கும் நோக்கம் கிஞ்சித்தும் எமக்குக் கிடையாது.

இதுவரை அமைக்கப்பட்டுள்ள தொழில் திட்டங்களின் பெயர்ப்பலகைகளில் இருக்கின்ற எழுத்து பிழைகள் அல்லது மொழிப்புறக்கணிப்பு போன்றவை படிப்படியாக திருத்தப்படும். அவற்றுக்கு மொழிபெயர்ப்பு போன்ற விடயங்களுக்கு நாம் உங்களை நாடுகின்றோம்.

இனிமேல் சீன நிறுவனங்களின் பெயர்ப்பலகைகள் அமைக்கப்படும்போது உங்கள் அமைச்சுடன் கலந்து பேசி அவற்றை அமைக்க எங்கள் வர்த்தகப் பிரிவு அதிகாரியை நான் நியமிக்கிறேன் என்று கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

நீங்கள் இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் ஒரு சிரேஷ்ட தலைவர் என்பதும், இந்நாட்டின் வாழும் இனங்களுக்கு இடையிலான தேசிய சகவாழ்வுக்கு நீங்கள் பாரிய பங்களிப்பை வழங்கி வருவதையும் நாம் அறிவோம். உண்மையில் எங்கள் தூதரகப் பணியாளர் மற்றும் இங்கு வரும் சீனப் பிரஜைகள் இனிமையான தமிழ்மொழியைக் கற்க ஆர்வம் காட்டுகின்றார்கள். அவர்களுக்கு உதவ நான் உங்களைக் கோருகின்றேன். இலங்கையின் இனங்களுக்கு இடையிலான தேசிய சகவாழ்வுக்கு எம்மால் அளிக்கக்கூடிய உதவிகளை நீங்கள் கோரினால் வழங்க நாம் தயார் என்று கூறினார்.

தூதுவருக்குப் பதிலளித்த அமைச்சர் மனோ கணேசன்,

சீன மொழியைப் போன்று தமிழ்மொழியும் உலகின் தொன்மை வாய்ந்த மொழிகளில் ஒன்று என்பது உங்களுக்குத் தெரியும். சீனத் தொழில் திட்டங்களின் பெயர்ப் பலகைகளில் தமிழ் மொழிப் புறக்கணிப்பு தமிழ் மக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் சிங்களம், தமிழ் ஆகியவை தேசிய அரசகரும மொழிகள். ஆங்கிலம் இணைப்பு மொழியாகும்.

எனது அமைச்சின் அரசகரும மொழிகள் திணைக்களத்தில் எமது தேசிய மொழிகளுடன் ஆங்கிலம், ஹிந்தி, சீன, ஜேர்மன், கொரிய, பிரெஞ்ச், ஜப்பானிய மொழிகளும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இந்நிலையில், வெளிநாட்டு மொழிகளை மதிக்கும் எமக்கு எமது மொழி மதிக்கப்படாமை வேதனையைத் தருவதை நீங்கள் புரிந்து கொண்டதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இது விடயமாக உங்கள் அதிகாரியுடன் கூட்டாக செயற்பட அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் மதிவதனை நான் உடனடியாக நியமிக்கின்றேன். உங்கள் தூதரகப் பணியாளர்களுக்கும், சீனத் தொழிலாளர்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும் இலங்கை மொழிகளைக் கற்றுக்கொள்ள அவசியமானால், அவரைத் தொடர்பு கொள்ளுங்கள். அவற்றுக்கு நாம் ஆவன செய்வோம் என்று கூறினார்.

இதன்போது அமைச்சரால், இலங்கையின் மொழிச் சட்ட விபரக்கோவை, சீனத் தூதுவருக்கு வழங்கப்பட்டது. சீனத் தூதரகத்தால் அமைச்சருக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. (ஐ)

# இரணைமடுக்குளத்து நீரை யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவரும் முன்மொழிவை சமர்ப்பியுங்கள்!

## அதிகாரிகளுக்கு வடக்கு ஆளுநர் பணிப்பு





கிளிநொச்சி, ஜன. 19

இரணைமடுக் குளத்திலிருந்து வீணாகக் கடலுக்குச் செல்லும் 60 வீதமான நீரை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவருவதற்கான சிறப்பு செயற்திட்ட முன்மொழிவைக் கூடிய விரைவில் தன்னிடம் சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

அந்தச்செயற்திட்டம்தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நேற்று முற்பகல் இரணைமடுக்குளம் மற்றும் அதன் சீரமைப்புச் செயற்திட்ட அலுவலகத்திற்கு திடீர் கண்காணிப்புப் பயணம் மேற்கொண்டு நிலைமைகளை ஆரய்ந்தார்.

இதன்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஆளுநரின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

கடந்த 10ஆம் திகதி கிளிநொச்சிக்கு பயணம் மேற்கொண்ட ஆளுநர், இரணைமடுக் குளத்துக்கும் சென்றிருந்தார். வான் கதவுகளின் திருத்தப் பணிகள் மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள சம்பந்தப்பட்டவர்களுக்கு அன்றைய தினம் பணிப்புரைகளை வழங்கியிருந்தார்.

அது தொடர்பிலான முன்னேற்றங்கள் குறித்து ஆராயும் நோக்கிலேயே நேற்றுத் திடீர்க் கண்காணிப்புப் பயணத்தை மேற்கொண்டார்.

இரணைமடுக் குளத்தின் 14 வான்கதவுகளில் 07 வான் கதவுகளில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து இரணைமடு நீர்த்தேக்கத்தை முழுமையாக ஜனவரி 31ஆம் திகதிகையளிக்க இரணைமடுக் குளத்தைச் சீரமைப்பு செய்த தனியார் நிறுவனம் உறுதியளித்துள்ளதுடன் பெப்ரவரி முதல் தொடர்ச்சியாக 06 மாதங்களுக்கு தன்னார்வ ரீதியான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவதற்கும் முன்வந்துள்ளது.

இதேவேளை,

தற்போது இரணைமடு நீர்த்தேக்கத்தின் 40 வீதமான நீர் மட்டுமே விவசாய நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் 60 வீதமான நீர் கடலைச் சென்றடைவதாக கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளரும் இரணைமடு நீர்த்தேக்கச் செயற்றிட்டத்தின் பணிப்பாளருமாகிய பொறியியலாளர் என்.சுதாகரன் ஆளுநரின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

அதனையடுத்து வீணாகக் கடலுக்குச் செல்லும் 60 வீதமான நீரை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவருவதற்கான சிறப்புச் செயற்றிட்ட முன்மொழிவைக் கூடிய விரைவில் தன்னிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்ட ஆளுநர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இது தொடர்பில் கலந்தாலோசித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டார்– என்றுள்ளது. (ஐ)

# தமிழரசுவின் செயற்குழு 26ஆம் திகதி கூடுகிறது

யாழ்ப்பாணம், ஜன. 19

இலங்கைத் தமிழரசுக் கட்சியின்மத்தியசெயற்குழு கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக் கிழமை மு.ப 9.30, மணிக்கு கொழும்பு ஆமர் வீதி விறைட்டன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின்தலைவர்மாவை சோ.சேனா திராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்தக் கூட்டத்தில் தற்போதய அரசியல் நிலைமை பற்றியும், தேசிய மாநாடு நடத் தும் தினம் தீர்மானிக்கப்பட்டுமாநாடு தொடர்பான விடயங்கள் ஆராயப்படுவதுடன் கட்சி கிளைகள்அமைப்பு,மகளீர்,இளைஞர்முன்னணி தொடர்பான முன்னெடுப்புகள்தொடர்பாக ஆராயப்படும். (ஐ)

# அரசியல் நெருக்கடிகளினால் பொறுப்புக்கூறல் வலுவிழப்பு

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 19

இலங்கையில் அரசியல் நெருக்கடி, போர்க்குற்றங்கள் தொடர்பிலான உண்மைகளை வெளிப்படுத்தல் மற்றும் நீதி வழங்கல் பொறிமுறை என்பன குறித்த கடப்பாடுகளை வலுவிழக்கச் செய்துள்ளது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையானது நியாயாதிக்கத்தை உறுதி செய்வதற்கு முறையான நடவடிக்கைகள் எவற்றையும் மேற்கொள்ளாத அரசின் தோல்வியை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

நீதி வழங்கல் தொடர்பான வாக்குறுதிகளை நிறைவேற்றும் கடப்பாடு அரசியல் நெருக்கடியினால் வலுவிழந்துள்ள நிலையில் நீண்ட காலமாகத் துன்பங்களை அனுபவித்துவரும் மக்கள் தொடர்பான தமது கடப்பாடுகளை விரைந்து நிறைவேற்றுவது தொடர்பில் இலங்கையின் நட்புறவு நாடுகள் மற்றும் அமைப்புக்கள் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் வழங்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறியுள்ளது. (ஐ)

# கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக ராகல்



மட்டக்களப்பு, ஜன. 19

கிழக்கு பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக அதே பல்கலைக்கழகத்தின் பௌதிகவியற்றுறைப் பேராசிரியர் எவ். சீ. ராகல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கிழக்கு பல்கலைக்கழத்தின் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் ரி. ஜெயசிங்கத்தின் பதவிக்காலம் எதிர்வரும் 21ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், புதிய துணைவேந்தரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் கடந்த மாதம் முதலாம் திகதி இடம்பெற்றது.

பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்களிடையே நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் முடிவில் பேராசிரியர் எவ். சீ. ராகல் முதனிலையிலும், கலாநிதி எம். சந்திரகாந்தா இரண்டாவதாகவும், திருமலை வளாக முதல்வர் பேராசிரியர் ரி. கனகசிங்கம் மூன்றாவதாகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

பேரவையின் பரிந்துரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

பல்கலைக்கழகங்கள் சட்டத்துக்கமைவாக பேரவையினால் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

ஜனாதிபதியினால் பேராசிரியர் எவ். சீ. ராகல் கிழக்கு பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக ஜனவரி 22 ஆம் திகதி முதல் நியமனம் செய்யப்படுகிறார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஜனாதிபதித் தேர்தலால் சிக்கல்கள் தீர்ந்துவிடாது

## கூறுகின்றது மஹிந்த தரப்பு

கொழும்பு, ஜன. 19

ஜனாதிபதித் தேர்தல் ஒன்றின் ஊடாகத் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலையைத் தீர்க்க முடியாது என மஹிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றே நாட்டுக்கு அவசியமாகும் என்றும் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கு அரசு அஞ்சுகின்றது எனின், முதலில் மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறும் அவர் கூறினார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சில உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் அரசு செயற்பட்டு வருவது கவலைக்குரிய விடயமாகும் என்றும் செஹான் சேமசிங்க தெரிவித்தார். (ஐ)

# காணாமற்போன மீனவர் மீட்பு

திருகோணமலை, வீரநகரிலிருந்து கடந்த 16 ஆம்திகதி கடலுக்குச்சென்றிருந்த நிலையில், காணாமற்போயிருந்த 31 வயதான நாகேஸ்வரன் டிலக்ஷன் என்ற மீனவர், சக மீனவர்களால், நேற்றுக் காலை மீட்கப்பட்டார்.

வீரநகர் மீனவச் சங்கத்தைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த இரு நாள்களாக மேற்கொண்ட தேடுதலின் பயனாகவே அவர் மீட்கப்பட்டுள்ளார்.

அவரது படகு பழுதடைந்திருந்தமையாலேயே, கரைதிரும்பமுடியாத நிலையில், தத்தளித்து கொண்டிருந்தாரெனத் தெரிவித்துள்ள மீனவர்கள், சோர்வுற்றிருந்த அவரை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாகவும் தெரிவித்தனர். (ஐ)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் ஜன. 19

வடமாகாண மருத்துவ மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணியக மண்டபத்தில் தலைவர், வைத்தியர் ப.அச்சுதன் தலைமையில் நடைபெறும். (இ

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## அன்றாட, நீண்ட கால பிரச்சினைகளுக்குத் தீர்வு

தமிழ் மக்கள் இரண்டு விதமான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

ஒன்று – உடனடிப் பிரச்சினை. ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் போனோர் விவகாரத்துக்குத் தீர்வு, போரினால் அழிந்த அவர்கள் பிரதேசத்தைக் கட்டி எழுப்புதல், வாழிடங்களை சீரமைத்தல், யுத்தத்தினால் பாதிப்புற்றோருக்கு நிவாரணமும் புனர்வாழ்வும் போன்றவை அவற்றுள் அடங்கும்.

அடுத்தது – நீண்ட காலத் தேசிய இனப் பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய நீதி, நியாயமான தீர்வு.

இரண்டும் வித்தியாசமான விடயங்கள். இரண்டையும் போட்டு நாம் குழப்பக் கூடாது.

தமிழர் தரப்பு ஆயுத வலிமையில் மேன்மையுற்று, இராணுவச் சமவலு நிலையில் இலங்கைப் படைகளுக்கு நிகராக இருந்த போது, அதற்கு பேரம் பேசும் சக்தியும் இருந்தது.

அச்சமயத்தில் இவ்விடயங்களைத் தென்னிலங்கைச் சிங்கள, பௌத்த அரசுகள் கையாண்ட முறைமையும் போக்கும் வேறு. இப்போது கையாளும் அணுகுமுறை வேறு.

அது போலவே, தமிழர் தரப்பிலும் கூட நிலைமை வேறு வேறுதான்.

ஆயுதச் சமவலு நிலையோடு இலங்கை அரசுடன் தீர்வுக்காகப் பேரம் பேசிய நிலைப்பாடு வேறு. இப்போது தமிழரின் கோரிக்கைப் போக்கு வேறு.

இலங்கை அரசுடன் விடுதலைப் புலிகள் சாதானப் பேச்சு நடத்திய காலத்தில் எல்லாம் முதலில் மக்களின் உடனடிப் பிரச்சினைக்கு – அன்றாடச் சிக்கல்களுக்கு – முதலில் விரைந்து தீர்வு காணுங்கள், பின்னர் நிரந்தரத் தீர்வு குறித்துப் பேசலாம் என்ற நிலைப்பாட்டையே புலிகள் கடைப்பிடித்தனர். அதனையே புலிகள் பெரும்பாலும் வற்புறுத்தி நின்றனர்.

ஆனால், அரசுத் தரப்போ அதற்கு மாறாக நின்றது.

நல்லது, மக்களின் அன்றாடப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்தும் பேசுவோம். அதேநேரம் இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்தும் சமாந்தரமாகப் பேசப்பட வேண்டும் என்றே ஒவ்வொரு தடவையும் இலங்கை அரசு அமைதிப் பேச்சுக்களில் வற்புறுத்தி நின்றது.

இப்போது நிலைமை மாறிவிட்டது; தலைகீழாகி விட்டது. புலிகளும் இல்லை. தமிழர்களின் ஆயுத ரீதியான பேரம் பேசும் வலிமை இலங்கைப் படைகள் இராணுவ நடவடிக்கைகள் மூலம் நிர்மூலாக்கப்பட்டு விட்டது. தமிழரிடம் எஞ்சியிருக்கும் ஜனநாயக ரீதியான வலிமையும் பேரம் பேசும் பலமான சக்தியாக இல்லை.

அதனால், கொழும்பு அரசு தன்னிஷ்டப்படி – தனது விருப்பப்படி – இந்த விடயங்களைக் கையாள்கின்றது.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு தருவதாகக் கூறும் தென்னிலங்கை அதையும் சரிவரச் செய்யவில்லை; தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வை முன்நகர்த்துவதிலும் ஈடுபாடு காட்டுவதாக இல்லை.

விடுதலை புலிகளோடு சமரசப் பேச்சு நடத்திய காலத்தில் இனப்பிரச்சினை விடயத்துக்கு முன்னுரிமை கொடுக்க வற்புறுத்திய கொழும்பு அரசு, இப்போது அந்தப் போக்கை கைவிட்டு விட்டது போலத் தெரிகின்றது.

போர் முடிந்து பத்து வருடங்களாகும் தற்போதைய சூழலில் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் விடயத்தில், கணிசமாக தன்னும் முன்னேறுவதில் ஈடுபாடு காட்டாமல், அதில் தோல்வி கண்ட கொழும்பு அரசுகள், அதை விடுத்து மக்களின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு என்று உடனடிப் பிரச்சினைகள் குறித்துச் சிந்திப்பதாகப் படம் காட்டி காலத்தை இழுத்தடிக்கின்றன. தீர்வு முயற்சியையும் கிடப்பில் போட்டு விட்டு தமிழரை ஏமாற்றி வருகின்றது.

இந்தச் சமயத்தில்தான் –

தமிழர்களின் உடனடிப் பிரச்சினையையும் தேசிய இனப் பிரச்சினையும் ஒன்று சேர்த்துக் கருத்து வெளியிட்டு விடயங்களைக் குழப்பியடிக்கப் பார்க்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் கூட்டமைப்பின் பிரமுகருமான மாவை சேனாதிராசா.

*"உத்தேச புதிய அரசமைப்பில் இனப்பிரச்சினைத் தீர்வு, காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் போனோர் விவகாரத்திற்குத் தீர்வு போன்ற தமிழ் மக்களுக்கு நன்மையளிக்கும் பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன"* என்று கூறுகின்றார் மாவை சேனாதிராசா.

தமிழ் மக்களின் நீண்ட காலத் தேசிய இனப் பிரச்சினைச் சிக்கலுக்குத் தீர்வு காணும் விடயத்தை அவர்களின் தற்போதைய – உடனடி – அன்றாடப் பிரச்சினையுடன் தொடர்புபடுத்த முயல்வது பொருத்தமற்ற வேலையாகும். அரசியல் சித்தாத்தங்கள் பற்றிய நடைமுறைக்கும் பொருந்தி வராத போக்கு இது.

அதுவும், நகல் வரைவாகக் கூட வராமல், வெறும் அறிக்கை வடிவத்தில் இருக்கும் ஒரு ஆவணத்தில் இப்பிரச்சினைகளுக்கு எல்லாம் – உடனடிச் சிக்கல்களுக்கு எல்லாம் – தீர்வு இருப்ப தாகக் கூறுவது அர்த்தமுள்ள கூற்றாகத் தெரியவில்லை.

தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்கான தீர்வு முயற்சிகள் ஒரு புறமும்

தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் மறுபுறமும் என்று சமாந்தரமாக இவை முன்னெடுக்கப்பட வேண்டும்.

இரண்டுக்குமான தீர்வுகளுமே இனிமேலும் காலத்தை இழுத்தடிக்காத விடயங்களாகக் கையாளப்பட வேண்டும்.

அதுவே சரியானதாகும்.

## கம்பனி பதிவாளர் திணைக்கள நடவடிக்கைகள் விஸ்தரிப்பு அனைத்து நிறுவனங்களும் திங்கள் முதல் ஒன்லைனில் பதிவு



கம்பனி பதிவுகளை மட்டுமே ஒன்லைனில் மேற்கொண்டு வந்த கம்பனி பதிவாளர் திணைக்களம், எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் அந்த நடைமுறையை மேலும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்த வகையில் நிறுவனங்கள், செயலாளர்கள், கணக்காய்வாளர்கள், சங்கங்கள் ஆகியவையும் ஒன்லைனில் பதிவுகளை மேற்கொள்ள எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் திணைக்கள நாயகம் ஆர்.எஸ். சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.

கைத்தொழில் மற்றும் வர்த்தகம், நீண்டகால இடம்பெயர்ந்தோர் மீள்குடியேற்றம், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சருமான ரிஷாத் பதியுதீனுக்கும் கம்பனி பதிவாளர் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையே நேற்று முன்தினம்(17) காலை இடம்பெற்ற சந்திப்பின் பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த சந்திப்பின் போது கம்பனி பதிவாளர் திணைக்களம் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுவருகின்றன எனவும், மோசடிகள் இடம்பெறுகின்றன எனவும்தமக்கு தகவல் கிடைத்துவருவதால் உயர் மட்ட அதிகாரிகள் இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி முறைகேடுகள் இடம் பெறாது பாதுகாக்குமாறு அமைச்சர் வலியுறுத்தினார்.

இந்த சந்திப்பின்போது கம்பனி பதிவாளர் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும், அவற்றை காலத்துக்கு பொருத்தமான முறையில் மாற்றுவது தொடர்பிலும் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் கம்பனிகளை ஒன்லைன் மூலம் பதிவு செய்யும் நடவடிக்கைகளை கம்பனி பதிவாளர் திணைக்களம் ஆரம்பித்திருந்தது. அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கைத்தொழில் அமைச்சை பொறுப்பேற்றதன் பின்னரே அதன் கீழான வரும் இந்த திணைக்களம் பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது என கம்பனி பதிவாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்த ஒன்லைன் விஸ்தரிப்பு திட்டத்துக்கு ரூபா. 47 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதாகவும், இந்த செலவீனங்கள் அனைத்தும் கம்பனி பதிவாளர் திணைக்களத்தால் கிடைத்த இலாபத்தைக் கொண்டே செலவிடப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

புதிய ஒன்லைன் நடைமுறை எதிர்வரும் மார்ச் மாத இறுதிக்குள் முழுமையான பயனை அளிக்க கூடியதாகவிருக்கும் எனவும் பதிவுக்கான ஆவணங்கள் ஒன்லைனில் பதிவேற்றப்பட்டு ஒரு மணி நேரத்துக்குள் உரிய நிறுவனங்கள் பதிவுக்குள்ளாக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதுவரை காலமும் இந்த நடைமுறைக்கு சுமார் 04 நாள்கள் வரையில் தேவைப்பட்டன எனவும், பதிவுகளை நாடிவருவோர் வீண் அலைச்சலுக்கு உள்ளாக்கப்பட்டனர் எனவும் தெரிவித்த அவர், இந்த வசதியை நவீன திட்டத்தை உருவாக்க ஆலோசனை தந்த அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு இந்த வகையில் நன்றி தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்த பதிவுகள் ஒரு மணி நேரத்துக்குள் பூர்த்தி செய்யப்பட்டாலும், இணைய பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு பதிவு செய்தவர்களே நேரடியாக வந்து அந்த ஆவணங்களை நேரடியாக பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு குரல் கொடுத்தவர் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர்.

### சிவாஜிலிங்கம் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,ஜன.19

ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு குரல் கொடுப்பதில் மறைந்த தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தலைசிறந்த தலைவராக விளங்கினார் என முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அத்தோடு இலங்கையில் 83 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனப் படுகொலையை கண்டித்து மிகப்பெரும் கடையடைப்பை முன்னெடுத்து வெற்றிகண்டவர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் 102ஆவது பிறந்தநாள் நினைவு தினம் நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) யாழ்ப்பாணம் பாசையூரில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், மறைந்த எம்.ஜி. ஆர், வெலிக்கடை சிறைச்சாலையில் கொல்லப்பட்ட எங்களுடைய தலைவர்கள் தங்கத்துரை மற்றும் குட்டிமணி ஆகியோரது குடும்பங்களுக்கு, அப்போதைய பிரதமராகவிருந்த மறைந்த இந்திராகாந்தியின் பணிப்புரைக்கு அமைய, தமிழக அரசின் செலவில் தொடர்மாடி வீடுகளை அமைத்துக்கொடுத்தவர்.

அதுமட்டுமல்லாது தனது சொந்தப் பணத்தை விடுதலை இயக்கங்களுக்கு அள்ளிக் கொடுத்தவர். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் அன்புக்கு பாத்திரமானவர் என்றும் அவர் தெரிவித்தார்.

## பிலிப்பைன்ஸ் ரிஷால் பூங்காவில் மைத்திரி



பிலிப்பைன்ஸின் மனிலா நகரிலுள்ள வரலாற்று புகழ்மிக்க நகரப் பூங்காவான ரிஷால் பூங்காவிலுள்ள தேசிய வீரர்களின் நினைவுத்தூபி வளாகத்துக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விஜயம் செய்தார்.

இதன்போது, தேசிய வீரர்களின் நினைவுத்தூபிக்கு ஜனாதிபதி, மலர் வளையம் வைத்து மலரஞ்சலி செலுத்தினார்.

நான்கு நாள் உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு பிலிப்பைன்ஸுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிலிப்பைன்ஸின் ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது இலங்கைக்கும் பிலிப்பைன்ஸுக்கும் இடையில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

அத்தோடு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, இலங்கைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் மூன்று ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டார்.

மேலும் பிலிப்பைன்ஸ் நாட்டில் வாழும் இலங்கையர்களையும் சந்தித்து கலந்துரையாடியதுடன், பிலிப்பைன்ஸ் நாடாளுமன்ற சபாநாயகரும் முன்னாள் ஜனாதிபதியுமான குளோரியா மகப்பகல் அரோயோ அம்மையாரையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### நாளை

20.01.2019
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம் : திருவாதிரை கா. 7.33 வரை
திதி : சதுர்த்தி பி.ப 1.54 வரை
சுபநேரம் : 9.35 - 11.05 வரை
இராகுகாலம் : 5.05 - 6.35 வரை

# வவுனியா பேராறு திட்ட பாதிப்பு தொடர்பில் விவசாயிகளுடன் அரச அதிகாரிகள் பேச்சு

வவுனியா,ஜன.19

வவுனியாமாவட்டத்தின்சாஸ்திரிகூழாங்குளத்தில் அமைக்கப்பட்டு வருகின்ற பேராறு குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் தொடர்பில் ஆராய்வதற்காக மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான உயர் அதிகாரிகள் குழுவொன்று நேற்று முன்தினம் நேரடி யாக பேராறு திட்டப்பிரதேசத்துக்கு சென்று விவசாயிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டது.



மாவட்ட அரசாங்க அதிபர் ஐ.எம்.ஹனீபா, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், வடிகாலமைப்புச் சபையின் வடமாகாண பிரதிப் பொதுமுகாமையாளர் பாரதிதாசன், பிரதேச செயலாளர் கா.உதயராசா, கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணை யாளர் இ.விஜயகுமார், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், பாதிக்கப்பட்ட விவாசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது விவசாயிகளுடன் செய்து கொள்ளப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின் பிரகாரம் புதிதாக வழங்கப்பட்ட காணிகளுக்கு ஆவணம் வழங்கல், வயல் பாதைகள் அமைத் தல், காணி அளவீட்டுப்பிரச்சினைகள், கால் வாய் வேலைகள், அணைக்கட்டில் இருந்து வெளியேறும் மேலதிக நீரை மூன்று குளங்க ளுக்கும் பாய்ச்சுதல், திட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கல் போன்ற விடயங்கள் தொடர்பில் விவசாயிகள் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இது தொடர்பில் அனைத்து பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாக அரசாங்க அதிபர் இதன்போது உறுதியளித்தார்.

## குளவிக் கொட்டுக்கு இலக்கான 80 மாணவர் வைத்தியசாலையில்

எல்ல,ஜன.19



எல்ல கல்வி வலயத்துக்குட் பட்ட எல்ல - பல்லேகெட்டுவ சிங்கள மகா வித்தியாலய மாணவர்கள் 80 பேர் நேற்று முன்தினம் குளவி கொட்டுக்கு இலக்காகிய நிலையில் தெமோ தர பிரதேச வைத்தியசாலை யில் சிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இதில் 5 பேர் மேலதிக சிகிச் சைக்காக பதுளை மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளனர் என வைத்தியசாலை வட் டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாடசாலை மைதானத்தில் மாண வர்கள் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது, அப்பகுதியில் இருந்த மரத்தில் காணப்பட்ட குளவிக் கூடு கலைந்து மாணவர்களை கொட்டியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன்போது குளவிக் கொட்டுக்கு இலக்கானமாணவர்கள்தரம்1,2,3,4,5 ஆகிய வகுப்பறைகளை சேர்ந்த ஆண் மற்றும் பெண் பிள்ளைகள் என பொலிஸார் மேலும் தெரிவித் தனர்.

குளவி கொட்டுக்கு இலக்கான மாணவர்கள் தொடர்ந்தும் தெமோதர மற்றும் பதுளை வைத்தியசாலை களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மாணவர்களின் நிலை கவலைக்கி டமாக இல்லை என தெரிவிக்கப் படுகின்றது.

## கம்பர்மலை வித்தியாலயத்தில் சிறப்பாக நடைபெற்ற வைரவிழா

வடமராட்சி,ஜன.19



வடமராட்சிக் கல்வி வலயத்தில் கொம்மந்தறை கிராமத்தில் அமைந் துள்ள கம்பர்மலை வித்தியாலயத்தின் 60 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு வித்தியாலயத்தின் வைரவிழா வித்தி யாலய மைதானத்தில் நேற்று முன் தினம் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

அதிபர் வ. ரமணசுதன் தலைமை யில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்திய துணைத்தூதர் ச. பாலச்சந்திரன் பங்கேற்றார்.

சிறப்பு விருந்தினர்களாக, வடமராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் யோ.ரவீந் திரன், ஓய்வுநிலை கல்வி வலயப் பணிப்பாளர் சி.நந்தகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வித்தியாலயத்தில் புதிதாக அமைக் கப்பட்ட நுழைவாயில் பிரதம விருந்தி னர் ச.பாலச்சந்திரனால் திறந்து வைக் கப்பட்டது. அத்துடன் புதிய சரஸ்வதி சிலை சிறப்பு விருந்தினர் யோ.ரவீந்திரனால் திரை நீக்கம் செய்யப்பட்டது.

பலவரலாற்றுநிகழ்வுகளைக்கொண்ட இந்தப் பாடசாலை 1997 ஆம் ஆண்டு பூபாள ராகங்கள் என்ற நிகழ்வை வித்தி யாலய மைதானத்தில் கொண்டாடியது. அதன்பின்னர் மீண்டுமொரு வரலாற்று நிகழ்வாக இந்த வைரவிழா நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

நிகழ்வில் வித்தியாலய மாணவர் களின் கலைநிகழ்ச்சிகளும் மருதமஞ்சரி என்ற விழாமலர் வெளியீடும் இடம்பெற் றன.

(ஏ)

## கிளிநொச்சியில் இடம்பெற்ற தைத்திருநாள் பண்பாட்டு விழா

கிளிநொச்சி,ஜன..19



கிளிநொச்சியில் தேசிய ஒருமைப்பாட் டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவ லகத்தின் ஏற்பாட்டில் தைத்திருநாள் பண்பாட்டு விழா இடம்பெற்றது.


இந்த விழா நேற்று முன்தினம் (வியா ழக்கிழமை) காலை 10 மணியளவில் இடம்பெற்றது.

கிளிநொச்சி சாந்தபுரம் முதியோர் சங்கத்துடன் இணைந்து இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் அலுவலக ஊழி யர்கள், முதியோர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இதன்போது பண்பாட்டு ரீதியில் பொங்கல் பொங்கப்பட் டதுடன், முதியோர்களுக்கான விளை யாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## கிளி.பொதுச்சந்தையில் பழக்கடை எரிந்து நாசம்

கிளிநொச்சி,ஜன.19



கிளிநொச்சி பொது சந்தையில் ஏற் பட்ட தீ விபத்தில் பழக்கடையொன்று முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

கிளிநொச்சி பொதுச்சந்தையில் அமைந்துள்ள பழக்கடை ஒன்றில் நேற்று முன்தினம் இரவு திடீரென தீப்பற்றிக் கொண்டதை அவதானித்த அயலவர் கள், தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு முயற்சிகளை எடுத்திருந் தனர்.

இதேவேளை கரைச்சிப்பிரதேச சபை யின் தீயணைப்புப்பிரிவு மற்றும் கரைச் சிப்பிரதேச சபை நிர்வாகம் சம்பவ இடத் துக்கு உடனடியாக விரைந்து ஏனைய கடைகளுக்கும் தீ பரவாது தீயைக் கட்டுப்படுத்தியிருந்தனர்.

இந்த விபத்து மின்ஒழுக்கினால் ஏற்பட்டதா? அல்லது வேறு காரணங்க ளால் ஏற்பட்டதா? என்பது குறித்துபொலி ஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## பணம் காணாமற்போனதை அடுத்து மாணவியை கடுமையாக தாக்கிய அதிபர்

வவுனியா,ஜன.19





வவுனியா நொச்சிகுளம் பகு தியில் அமைந்துள்ள பிரபல பாடசாலையொன்றின் மாணவி மீது அதிபர் தாக்குதல் மேற் கொண்டதில் படுகாயமடைந்த மாணவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட நொச்சிக்குளம் பகுதியில் அமைந்துள்ளபாடசாலையொன் றின் பாடசாலை மாணவி மீது கடந்த புதன்கிழமை (16.01.219) அதிபர் மேற்கொண்ட தாக்குத லில் படுகாயமடைந்த மாணவி ஓமந்தை பொலிஸாரின் உதவி யுடன் சட்ட வைத்திய அதிகாரி யின் பரிசோதனையின் பின்னர் வவுனியா மாவட்ட பொது வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இதுவரையில் குறித்த பாட சாலை அதிபருக்கு எதிராக ஓமந்தை பொலிஸார் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ள வில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவியின் தந்தை கருத்து தெரிவிக்கையில்,

வகுப்பறையில் இருந்த ஆசிரியர் ஒருவரின் பணத்தை காணவில்லையென தெரி வித்து எனது பிள்ளையை அதி பர் தனது அறையில் வைத்து தாக்குதல் மேற்கொண்டுள் ளார்.

ஆனால் இதுவரையில் ஓமந்தை பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லையெனவும் எனது மக ளுக்கு கால் மற்றும் உடம்பு பகுதி யில் பலத்த காயங்கள் உள்ளன. ஊடகங்களும் சமூக அமைப்புக் களும் தான் எனது மகளுக்கு நீதியினை பெற்றுத்தரவேண்டு மென தெரிவித்தார்.

# சபரிமலையில் வழிபாட்டில் ஈடுபட்ட 2 பெண்களுக்கும் பாதுகாப்பு வழங்குக!

கேரள அரசுக்கு உச்ச நீதிமன்றம் அறிவுறுத்து

புதுடில்லி,ஜன.19

சபரிமலைக்கு சென்ற இருபெண்களுக்கும் போதுமான பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று கேரள அரசுக்கு உச்சநீதி மன்றம் அறிவுறுத்தியுள்ளது.

கேரளாவைச் சேர்ந்த கனகதுர்கா (44), பிந்து (42) ஆகிய இரு பெண்கள் பலத்த பாதுகாப்புடன் சபரிமலை ஐயப்பன் கோயிலில் வழிபட்டனர். பாதுகாப்பு கருதி, இவர்கள் இருவரும் மாநில அரசின் பாதுகாப்பின் கீழ் உள்ளனர்.



இந்தசூழலில், கடந்தசெவ்வாய்க்கிழமை மலப்புரத்தில் உள்ள தனது கணவர் வீட்டுக்கு கனகதுர்கா சென்றார். அப்போது, கனகதுர்காவை அவரது மாமியார் கடுமையாக தாக்கினார் எனக் கூறப்பட்டது. இதில் கனகதுர்கா பலத்த காயம் அடைந்தார். உடனடியாக மருத்துவமனையில் கனக துர்கா அனுமதிக்கப்பட்டார்.

இந்த நிலையில், சபரிமலை கோவில் சென்று வழிபட்ட இரு பெண்களும், தங்களுக்கு பாதுகாப்பு கோரி உச்சநீதிமன்றத்தில் மனு செய்தனர்.

இந்த மனு உச்சநீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையிலான அமர்வு, இரு பெண்களுக்கும் 24 மணி நேரமும் போதுமான பாதுகாப்பு வழங்குவது அவசியம். கேரள அரசு, இரு பெண்களுக்கும் போதுமான பாதுகாப்பு வழங்க வேண்டும், இரு பெண்களின் பாதுகாப்புக்கு கேரள அரசே பொறுப்பு என தெரிவித்தது.

# ரஜனியுடன் இணைவாரா கமல்? காலம்தான் முடிவு செய்யும்!



**என்கிறார் சினேகன்**

புதுக்கோட்டை,ஜன.19

ரஜனியுடன் இணைந்து கமல் அரசியல் செய்வாரா என்பது குறித்து மக்கள் நீதி மய்யத்தின் மாநில பொதுச் செயலாளர் சினேகன் பதில் அளித்தார்.

மக்கள் நீதி மய்யத்தின் மாநிலப் பொதுச்செயலாளர் கவிஞர் சினேகன், புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் நேற்று தெரிவிக்கையில் –

"மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன், தொடர்ந்து மக்களுக்காக குரல் கொடுத்து வருகிறார். மேலும் பல கிராமங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்து வருகிறார்.

வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் நீதி மய்யம் யாருடன் கூட்டணி வைத்துக் கொள்ளும் என்பதை கமல் முடிவு செய்து முறைப்படி அறிவிப்பார். கொள்கை இல்லாத கட்சிகளுடன் கமல் ஒருபோதும் ஒன்றிணைய மாட்டார்.

ரஜனிகாந்தும் கமலும் இணைந்து அரசியல் களத்தில் நிற்பார்களா? ரஜனிகாந்துடன் கமல் இணைவாரா என்பது குறித்து காலம்தான் முடிவு செய்யும்" என்றார்.

# தங்கத்தில் பானை, கரும்பு, மாடு நகைத் தொழிலாளி சாதனை

வேலூர்,ஜன.19

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 12 மணி நேர தொடர் முயற்சியில் 1.9 கிராம் தங்கத்தில் பொங்கல் பானை, கரும்பு, மாடு ஆகியவற்றை தங்க நகைத் தொழிலாளி சி.எஸ்.தேவன் உருவாக்கியுள்ளார்.

ஆம்பூரை சேர்ந்த தங்க நகைத் தொழிலாளி சி.எஸ்.தேவன் (வயது 52). இவர், வங்கி ஒன்றில் நகை மதிப்பீட்டாளராக பணிபுரிந்து வருகிறார். இவர், உலக சாதனை புரிவதற்காக முன்னாள் முதலமைச்சர்கள் கருணாநிதி, ஜெயலலிதா மற்றும் மகாத்மா காந்தி, அப்துல்கலாம் ஆகியோரின் உருவங்களையும், கிறிஸ்துமஸ் குடில், மிகச்சிறிய அளவில் கிரிக்கெட் உலக கோப்பை, திருக்குறள் சுவடி ஆகியவற்றையும் தங்கத்தில் உருவாக்கி சாதனை படைத்து உள்ளார்.



இந்த நிலையில் 1.9 கிராம் தங்கத்தில் பொங்கல் பானை, கரும்பு, மாடு ஆகியவற்றை உருவாக்கியுள்ளார். 4 செ.மீ உயரத்தில் கரும்பு, 1 செ.மீ உயரத்தில் மாடு ஆகியவற்றை தங்கத்தில் செய்துள்ளார்.

# பத்திரிகையாளர் கொலை வழக்கில் சாமியார் ரஹீமுக்கு ஆயுள் தண்டனை

சண்டிகர்,ஜன.19

பத்திரிகையாளரை கொலை செய்த வழக்கில் தேரா சச்சா சவுதா அமைப்பின் தலைவர் குர்மீத் ராம் ரஹீம் சிங் உள்பட 4 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து சிபிஐ நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அரியானா மாநிலம் சில்சாந் அகரில் வசித்து வந்த பத்திரிகையாளர் சத்ரபதி. இவர் மாலை நாளிதழ் ஆசிரியராக இருந்தார்.

இவரது நாளிதழில் அரியானா சாமியார் குர்மீத் ராம் ரஹீம் சிங் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்வதாக செய்தி வெளியிட்டார். இதையடுத்து 2002ஆம் ஆண்டு அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதுதொடர்பாக, 2003ஆம் ஆண்டு சாமியார் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. 2006ஆம் ஆண்டு இந்த வழக்கு சிபிஐக்கு மாற்றப்பட்டது.

பாலியல் பலாத்காரம் வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டு, 20 ஆண்டுகள் சிறைத் தண்டனையை ஏற்கனவே அவர் அனுபவித்து வருகிறார்.

இதற்கிடையே, பத்திரிகையாளர் ராம்சந்தர் சத்ரபதி கொலை செய்யப்பட்ட வழக்கில் தேரா சச்சா சவுதா அமைப்பின் தலைவர் குர்மீத் ராம் ரஹீம் சிங் குற்றவாளி என அரியானா மாநிலத்தின் சிபிஐ நீதிமன்றம் கடந்த வாரம் தீர்ப்பளித்தது.



பத்திரிகையாளர் ராம்சந்தர் சத்ரபதி கொலை வழக்கில் சாமியார் குர்மீத் ராம் ரஹீம் சிங் உள்ளிட்ட 4 பேர் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன. சாமியார் குர்மீத் ராம் ரஹீம் சிங்கிற்கான தண்டனை வரும் 17 ஆம் திகதி அறிவிக்கப்படும் என அரியானா பஞ்சகுலா நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், பத்திரிகையாளரை கொலை செய்த வழக்கில் தேரா சச்சா சவுதா அமைப்பின் தலைவர் குர்மீத் ராம் ரஹீம் சிங், மற்ற குற்றவாளிகளான குல்தீப் சிங், நிர்மல் சிங், கிரின் லால் ஆகியோருக்கு ஆயுள் தண்டனை விதித்து சிபிஐ நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

# ஜம்மு காஷ்மீரில் பனிச்சரிவில் சிக்கியது கார் மூவர் பலி; 7 பேரை மீட்கும் பணி தொடர்கிறது

ஸ்ரீநகர்,ஜன.19

லடாக்கில்ஏற்பட்டபனிச்சரிவில் காரில் சென்ற 10 பேர் சிக்கினர். மூவர் சடலமாக மீட்கப்பட்டுள்ள நிலையில், ஏனைய 7 பேரை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது.

ஜம்மு காஷ்மீரின் லடாக் மாவட்டத்தில் உள்ள ஷைக் மற்றும் நுப்ரா பள்ளத்தாக்கு பகுதிகளை இணைக்கும் மிக உயரமான மலைப்பகுதி சாலை உள்ளது. இந்த வழியாக 10 பேருடன் சென்ற ஸ்கார்பியோ கார் கார்துக்லா பாஸ் என்ற இடத்தில், பனிச்சரிவில் சிக்கி யது.

பனிச்சரிவு, காரை முழுவதுமாக மூழ்கடித்ததால், காரில் பயணித்த அனைவரும் சிக்கிக் கொண்டனர். பனிச்சரிவில் சிக்கிய காரை விரைந்து வந்து மீட்கும் பணியை மாநில பேரிடர் மீட்புக்குழுவினர் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்டனர்.

இதில், மூவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது. ஏனைய 7 பேரை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.




# நல்லூர் பிரதேச சபை

## வீதவரிக்கான (சோலைவரி) பகிரங்க அறிவித்தல்

1987ம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைச்சட்டத்தின் அதிகாரத்திற்கு அமைய நல்லூர் பிரதேச சபையின் கீழ் உள்ள நல்லூர் உப அலுவலக எல்லைக்குள் அமைந்துள்ள வீடுகள், கட்டடங்கள், காணிகள், சிறுமனைகள், வெற்று ஆதனங்கள், ஆகியவற்றின் 2019ஆம் ஆண்டின் புதிய ஆதன மதிப்பீட்டின் ஆண்டுப்பெறுமதியின் ஏற்கனவே தீர்மானித்த 10% வரியை, வரியிறுப்பாளர்கள் நன்மை கருதி ஆண்டு பெறுமதியின் 4% வரியாகஅறவிட சபை தீர்மானித்துள்ளது,என்பதை நல்லூர் உப அலுவலக எல்லைக்குள் வதியும் குடியிருப்பாளருக்கு இத்தால் அறியத் தருகின்றேன். உரிய காலப்பகுதியில் வீத வரிகளைச் செலுத்தி உரிய கழிவினைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன் பொதுமக்களின் நன்மை கருதி இம் மாதம் சனி, ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் உப அலுவலகத்தில் உரிய வரியைச் செலுத்த ஆவன செய்யப்பட்டுள்ளது, என்பதையும் அறியத்தருகின்றேன்.

**தா.தியாகமூர்த்தி**
**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேசசபை.**
**19.01.2019.**

# மயிரிழையில் உயிர் தப்பினார் இங்கிலாந்து இளவரசர் பிலிப்

லண்டன்,ஜன.19

இங்கிலாந்து இளவரசர் பிலிப் செலுத்திய கார் விபத்தில் சிக்கியபோதிலும் அவர் அதிர்ஷ்டவச மாக காயமின்றி தப்பினார்

கிழக்கு இங்கிலாந்தில் உள்ள சண்டிங்கம் எஸ்டேட் அருகே இந்த விபத்து நடைபெற்றுள்ளது.

இளவரசர் பிலிப் தனது காரை பிரதான சாலைக்கு எடுத்து வரும் போது, அவ்வழியாக வந்த மற்றொரு கார் மோதியதாக தெரிகிறது. விபத்து ஏற்பட்ட மற்றொரு காரில் இருந்த இருவர் இலேசான காயம் அடைந்தனர். அவர்கள் இருவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர் வீடு திரும்பினர். லேண்ட்ரோவர் கார் சாலையின் ஓரத்தில் ஒருபக்கமாக கவிழ்ந்து கிடக்கும் காட்சிகள் வெளியாகியுள்ளன.

இங்கிலாந்து பக்கிங்ஹாம் அரண்மனையும் விபத்து நடைபெற்றதை உறுதி செய்துள்ளது. இளவரசருக்கு இந்த விபத்தில் எந்த காயமும் ஏற்படவில்லை எனவும் பக்கிங்ஹாம் அரண்மனை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலகின் ராட்சத பெண் சுறாவுடன் நாள் முழுவதும் இருந்த நீர்மூழ்கி வீரர்கள்



ஹவாய்,ஜன.19

உலகத்திலேயே மிகவும் பெரிய ராட்சத சுறாவுக்கு அருகில் சென்று, உயிருடன் திரும்பியுள்ளனர் நீர்மூழ்கி வீரர்கள் குழுவினர். இந்த சாகச சம்பவம் ஹவாயில் நடந்துள்ளது.

20 வருடங்களுக்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்ட அடர் நீல (Deep Blue) சுறாவான இது, 20 அடி நீளமும் சுமார் 2.5 தொன் எடையும் கொண்டது.

ஓஹூ தெற்கு கடற்கரைப் பகுதியில் இறந்த திமிங்கலம் ஒன்றின் உடல் மிதந்தது. அதை நோக்கி ராட்சத சுறா வந்தபோது நீர்மூழ்கி வீரர்கள் அதைக் கண்டுள்ளனர்.

இதுகுறித்துப் பேசிய நீர்மூழ்கி வீரர்களில் ஒருவர் "ஓன் ராமெசா, புலி சுறாக்கள் திமிங்கலம் ஒன்றுக்கு அருகில் வந்தபோதுதான் ராட்சத சுறாவைப் பார்த்தோம்.

பெண் சுறா வந்தவுடன் மற்ற புலி சுறாக்கள் வேகமாகக் கலைந்து சென்றன. உடனே பெண் சுறா, படகின் மீது உரசியது.

ராட்சத வடிவில் அழகாக இருந்த பெண் சுறா, எங்களின் படகை உராய்வதற்கான இடமாகப் பயன்படுத்த விரும்பியது. நாங்கள் மெதுவாக அதன் அருகில் சென்றோம்; தொட்டுப் பார்த்தோம். நேரலையும் செய்தோம்.

அதிகாலையில் சூரியன் உதிக்கும்போது சென்ற நாங்கள், நாள் முழுவதும் பெண் சுறாவுடன் இருந்தோம்" என்று தெரிவித்துள்ளார்.

# வடகொரிய முக்கிய அரச அதிகாரி சீனாவிலிருந்து அமெரிக்கா பயணம்

## ட்ரம்ப் - கிம் சந்திப்புக்கு முன்னோடி நடவடிக்கையா?

வொஷிங்டன்,ஜன.19

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மற்றும் வட கொரிய தலைவர் கிம் ஜாங் - உன் இடையே நடைபெற சாத்தியமுள்ள இரண்டாவது உச்சி மாநாட்டுக்கு முன்பு வட கொரியாவின் அரசு தரப்பைச் சேர்ந்த முக்கிய அதிகாரியொருவர் அமெரிக்கா சென்றுள்ளார்.

கிம் யோங் - சோல் என்ற அந்த வட கொரிய பேச்சுவார்த்தையாளர் சீனாவின் தலைநகரான பீஜிங்கிலிருந்து அமெரிக்க ஜனாதிபதி டிரம்புக்கு ஒரு கடிதத்தை கொண்டு




சென்றதாக தென் கொரிய ஊடக தகவல்கள் கூறுகின்றன.

அமெரிக்க வெளியுறவுச் செயலர் மைக் பாம்பேயோவை கிம் யோங் - சோல் நேற்று சந்திக்க விருந்தார் என்றும் தென் கொரிய செய்தி முகமையான யோன்ஹாப் குறிப்பிட்டுள்ளது.

டிரம்ப் மற்றும் கிம் இடையேயான இரண்டாவது உச்சி மாநாடு வியட்நாமில் நடக்கக்கூடும் என்ற யூகங்கள் அதிகரித்த நிலையில் வடகொரியாவின் முக்கிய அதிகாரி அமெரிக்கா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தந்தை மீது மகள் வழக்கு




தனது பெயரை தவறாக பயன் படுத்துகிறார் எனத் தெரிவித்து தந்தை மீது பாடகி ரிஹானா வழக்கு தொடர்ந்துள்ளார்.

ரிஹானாவும் பெண்டி பியுட்டி என்றபெயரில் அழகுசாதனப்பொருள்கள் நிறுவனம் ஒன்றை 2017ஆம் ஆண்டு தொடங்கி நடத்தி வந்தார்.

இந்த நிலையில் ரிஹானாவின் பெயரை அவரது அனுமதியின்றி, அவரது தந்தை ரொனால்ட் பெண்டியும், மோசஸ் பெர்கின்ஸும் பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் தங்கள் நிறுவனத்துக்கு பயன்படுத்தி வந்தனர் எனக் கூறப்படுகிறது. இதை நிறுத்திக் கொள்ளுமாறு பாடகி ரிஹானா கூறியும், அவர்கள் செவி சாய்க்க வில்லை என்று தெரிகிறது.

இதையடுத்து தந்தை ரொனால்ட் பெண்டி, அவரது கூட்டாளி மோசஸ் பெர்கின்ஸ் ஆகியோர் மீது பாடகி ரிஹானா நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

## எத்தியோப்பியாவில் பஸ் விபத்து 18 பேர் பரிதாபகரமாக உயிரிழப்பு



எத்தியோப்பியா நாட்டில் பஸ் கவிழ்ந்து விழுந்ததில் அதில் பயணித்த 18 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஆபிரிக்க நாடான எத்தியோப்பியாவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள வொல்லேகா பகுதியில் ஏராளமான பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த பஸ் திடீரென நிலை தடுமாறி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்து குறித்து தகவல் அறிந்த பொலிஸார் மற்றும் மீட்புக் குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் 18 பேர் பரிதாபமாக உயிரிழந்ததாக அரசு செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

மேலும், 33 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அதில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என மீட்புக்குழுவினர் தெரிவித்தனர்.

## வெள்ளை மாளிகையை தகர்க்க திட்டம் இளைஞரை கைது செய்த பொலிஸார்



வொஷிங்டன், ஜன. 19

அமெரிக்க வெள்ளை மாளிகையை தகர்க்க திட்டார் எனக் கூறி இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கைதான இளைஞர் 21 வயதான ஹர் ஜலால் தஹெப் எனவும் அவரிடம் இருந்து கைகளால் வரையப்பட்ட தரை தள வரைபடம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் வோஷிங்டனில் உள்ள அரசு அலுவலகங்கள் பலவற்றுக்கும் அவர் குறிவைத்துள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. அமெரிக்காவின் ஜோர்ஜியா மாகாணத்தை சேர்ந்த தஹெப் என்ற இளைஞர் வின் னெட் கவுண்டி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

# தங்கச்சுரங்கம் சரிந்து விபத்து ஆப்கானில் எண்மர் உயிரிழப்பு

காபூல்,ஜன. 19

ஆப்கானிஸ்தானில் தங்கச் சுரங்கம் சரிந்து விபத்துக்குள்ளானதில், சுரங்கத்தினுள் வேலை செய்துகொண்டிருந்த 8 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானின் வடகிழக்கு மாகாணமான படகானில் தங்கச் சுரங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில், ராகிஸ்தான் மாவட்டத்தில் உள்ள ஒரு தங்கச் சுரங்கத்தில் தொழிலாளர்கள், தங்கத் தாதுக்களை தோண்டி எடுக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது திடீரென சுரங்கத்தின் ஒரு பகுதி சரிந்து விழுந்தது. இதில் இடிபாடுகளில் சிக்கி 8 தொழிலாளர்கள் பலியானார்கள். 2 பேர் காயம் அடைந்தனர்.

இந்த ஆண்டின் இரண்டாவது சுரங்க விபத்து இதுவாகும். இதே மாகாணத்தில் கடந்த 4ஆம் திகதி ஏற்பட்ட சுரங்க விபத்தில் 40 பேர் பலியாகினர்.

ஆப்கானிஸ்தானில் உள்ள சுரங்கங்களில் பெரும்பாலான சுரங்கங்கள் மிகவும் பழமையானவை. அவை சரியான முறையில் பராமரிக்கப்படாதமையால், அடிக்கடி



விபத்து ஏற்படுவது குறிப்பிடத்தக்கது.










யாழ். முஸ்லிம் பகுதிக்கு நேற்றுமுன்தினம் விஜயம் மேற்கொண்ட வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் இராகவன், அங்குள்ள நிலைமைகளை நேரில் அவதானித்தார். ஒஸ்மானியாக் கல்லூரியின் கால்கோள் விழாவிலும் கலந்து கொண்டார்.

மாநகர சபை உறுப்பினர்கள், யாழ். பிரதேச செயலர் மற்றும் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். அங்கு எடுக்கப்பட்ட படங்கள். (இ - 19)

**படங்கள் :- எம்.எல்.லாபிர்**





யாழ். மன்பஉல் உலூம் முன்பள்ளி மாணவர்களின் கலைவிழா அதிபர் ஜமாமொஹிடீன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது யாழ். பிரதேச செயலர் பொ. தயானந்தன் பிரதம அதிதி யாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். (இ - 19)

யாழ். பிரதேச கலாசார அதிகார சபையினால் 2019 ஆம் ஆண்டுக்கான திட்ட வரைவு விடயமான கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை மாலை யாழ் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் பொ.தயானந்தன் தலைமையில் நடைபெற்றது. **படங்கள் :- எம்.எல்.லாபிர்**







# உணவகம் தீப்பற்றி எரிந்தது





யாழ் நகர் மஸ்ஜித் முகம்மது நாலு சந்தியில் அமைந்துள்ள உணவகம் ஒன்று வியாழன் அதிகாலை தீப்பற்றி எரிந்தது.

காஸ் சிலிண்டரில் ஏற்பட்ட கசிவினால் தீப்பற்றிக் கொண்டது என்றும் கடையின் பின்பகுதியான சமையல் அறை முற்றாக எரிந்துள்ளது என்றும் கூறப்பட்டது.

தீயணைப்புப் பிரிவினர் மற்றும் பெலிஸாரும் உடனடியாக அவ்விடத்துக்கு விரைந்து வந்தனர். அவர்களுடன் அயலவர்களும் இணைந்து தீயை அணைத்தனர். அதனால் பெரும் சேதத்திலிருந்து இக்கட்டடம் பாதுகாக்கப் பட்டுள்ளது. (இ -19)








யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட சமுதாய மற்றும் குடும்ப மருத் துவத் துறையினரும் யாழ் நீரிழிவுக் கழகத்தினரும் இணைந்து நல்லூர் பிரதேச செயலகத்தில் “எமது சுகவாழ்வு எமது கையில்” எனும் தொனிப் பொருளில் நடத்திய செயலமர்வின்போது வைத்திய நிபுணர் எம். அரவிந்தன், வைத்திய நிபுணர் ரி.குமரன், யாழ் நீரிழிவு கழகத் தலைவர் தி. மைக்கல் ஆகியோர் உரையாற்றுகின்றமையை படங்களில் காணலாம். (இ)

# வடக்கு – கிழக்கில் உளநெருக்கீடுகளால் ஆசிரியர்கள் பலர் ஓய்வு பெற முடிவு!

## கவலை வெளியிடுகிறது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜன. 19

வடக்கு – கிழக்கு மாகாண ஆசிரியர்களில் இருபது வருட சேவை நிறைவு செய்த பெரும்பாலானவர்கள் அறுபது வயதிற்கு முன்னரே ஓய்வு பெற முடிவு செய்துள்ளனர். உளநெருக்கீடுகளால்தான் அவர்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளனர் என்பது அதிர்ச்சி தரும் தகவல்.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வடக்கு – கிழக்கு மாகாணங்களின் கல்வி நிலை தொடர்ந்தும் கவலைக்கிடமாகச் செல்கின்றது. அதற்கான காரணங்கள் பலவற்றை பல தடவைகள் நாம் ஆதாரபூர்வமாக வெளியிட்டோம். இதை விட அதிபர்கள், ஆசிரியர்கள் மீது பல்வேறு நெருக்கீடுகள் பிரயோகிக்கப்படுகின்றன.

குற்றம் செய்யாத அதிபர்கள், ஆசிரியர்கள் நியாயமின்றித் தண்டிக்கப்படுவதும், இடமாற்றம் செய்யப்படுவதும், திருப்தியில்லாமல் விசாரணைகள் நடத்தப்படுவதும், பக்கச்சார்பாக தீர்ப்புகள் வழங்கப்படுவதும் ஒருபுறம் இருக்க,

மாணவர்களைக் கட்டுப்பாட்டுடன் வழிப்படுத்த முடியாதவர்களாக அதிபர்கள், ஆசிரியர்கள் இருப்பதும், மாணவர்களுக்குச் சட்ட ரீதியிலான அதிகளவு அநாவசியச் சுதந்திரமும், சமூகத்தில் புகுந்துள்ள சமூகத்தையும் சந்ததியையும் அழிக்கின்ற நடைமுறைகளுமே இத்தகைய நிலைக்குக் காரணம்.

இவை அனைத்தும் சட்டத்தாலும், சமூகத்தாலும் மாற்ற அல்லது நிறுத்த முடியாதவை. இவற்றை அதிபர்களும், ஆசிரியர்களும் மாற்றலாம் என்கின்ற நிலை கடந்துவிட்டது.

ஆகையால் அதிபர்களும், ஆசிரியர்களும் சேவையில் இருந்து ஓய்வுபெறுவதைத்தவிர வேறுவழியில்லைஎன்கின்ற முடிவினாலேயே இத்தகைய பெருமளவான ஆசிரியர்கள் ஓய்வுபெற முடிவு செய்துள்ளனர்.

மாறாக தவறு செய்கின்ற அதிகாரிகள் தண்டிக்கப்படுவதும் இல்லை – கண்டிக்கப்படுவதும் இல்லை. அவர்களுக்குப் பதவி உயர்வுகளே வழங்கப்படுகின்றன. இதைவிடச் சிலர் ஓய்வின் பின்னரும் பதவியில் தொடர ஆசைப்படுகின்றனர். ஆனால் அதே அதிகாரிகள் அதிபர்களையும், ஆசிரியர்களையும் விசாரணை செய்கின்ற அதிகாரிகளாகவும், தீர்ப்பு வழங்குகின்ற நீதிபதிகளாகவும் நியமனம் செய்யப்படுகின்றமை கவலைக்குரிய விடயம் மட்டுமன்றி எமது தலையில் நாமே இடியை இழுத்தெடுக்கின்றோம்.

தவறு செய்யும் அதிகாரிகள் பற்றி முறைப்பாடுகள் செய்தால் அதுபற்றி சிறிதளவும் சிந்திக்காததால் ஆசிரியர்கள் சிலர் உயிரிழந்த சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

இறப்பைவிட மௌனமாக அடங்கியிருப்பது அல்லது ஒதுங்கியிருப்பதென அதிபர்களும், ஆசிரியர்களும் முடிவெடுத்திருக்கின்றமை அவர்களின் புத்திசாதுரியம் என்பதனைவிட இயலாத்தன்மை என்றே தோன்றுகின்றது. மாணவர்கள் கைகட்டி நின்ற காலம்போய் ஆசிரியர்கள் கைகட்டி நிற்கும் சூழல் இன்று உள்ளது.

ஏற்கனவே வடக்கு – கிழக்கு மாகாணங்களில் பாடத்துறைசார்ந்த ஆயிரக்கணக்கான ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன. இந்நிலையில் பெருமளவான ஆசிரியர்கள் ஓய்வுபெற்றால் இன்னும் நிலைமை மோசமாகும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கவலை வெளியிடுகிறது – என்றுள்ளது. (ஜ - 07)

## ஜனாதிபதி சட்டத்தரணியாக தவராசா சத்தியப் பிரமாணம்

மனித உரிமை ஆர்வலரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமாக கே.வி.தவராசா உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில்நேற்றுக் காலை சத்தியப்பிரமாணம்செய்துகொண்டார்.



பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் முதல் வழக்காக குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலிருந்து கடந்த கார்த்திகை மாதம் மேல் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை வழக்கு வஷ்ர் பல நூற்றக்கணக்கான வழக்குகளில் அரசியல் கைதிகளுக்காக ஆஜராகி கே.வி.தவராசா வாதாடியுள்ளார்.

குற்றவியல் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகளுக்கு எதிராக சட்டமா அதிபரினால் கொழும்பு காலி மாத்தறை அம்பாந்தோட்டை களுத்துறை பாணந்துறை நீர்கொழும்பு ஆகிய மேல் நீதிமன்றங்களில் 38 வருடங்களாக வாதாடி பல அரசியல் கைதிகளுக்கு தவராசா விடுதலை வாங்கிக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாதத் தடைச்சட்டம், மற்றும் அவசரகால ஒழுங்கு விதிகளின் கைது செய்யப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட இளைஞர்கள், யுவதிகள் மட்டுமின்றி வைத்தியர்கள், பொறியிலாளர்கள், உள்ளக சர்வதேச ஊடகவியளாளர்கள், கோவில் தர்மகர்த்தாக்கள், கிறிஸ்தவமதப் போதகர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அரச சார்பற்ற அமைப்பின் அதிகாரிகள், சுங்க திணைக்களத்தின் உயரதிகாரிகள், ஆசிரியர்கள், கிராம சேவையாளர்கள், தொழில் அதிபர்கள், வர்த்தகர்கள், புலம்பெயர் தமிழர்கள், வங்கி முகாமையாளர், என சமூகத்தின் பல தரப்பட்டவர்களுக்காகவும் கே.வி. தவராசா ஆஜராகியுள்ளார். (இ)

## 100 கிலோ வெடிபொருள்களுடன் நால்வர் புத்தளத்தில் கைதாகினர்

கொழும்பு, ஜன. 19

புத்தளம் – வனாத்துவில்லு பகுதியில் 100 கிலோ வெடி பொருள்களும் 100 டெட்டனேட்டர்களும் மீட்கப்பட்டுள்ளன. மாவனல்லையில் அண்மையில் புத்தர்சிலைகளை உடைத்தார் என்ற குற்றச்சாட்டில் கைதான ஒருவர் வழங்கிய தகவல்படி இவை மீட்கப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பிலும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் கூறினர். (ஐ)

## விபத்தில் சிறுவன் உயிரிழப்பு; பொலிஸ் உத்தியோகத்தர் கைது

இணுவில்,ஜன.19

இணுவில் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சிறுவன் உயிரிழந்தமை தொடர்பில் விபத்தை ஏற்படுத்தினார் எனத் தெரிவித்து பொலிஸ் உத்தியோகத்தர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தைப்பொங்கல் தினத்தன்று இணுவில் 7 ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற ஓட்டோ விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் படுகாயமடைந்தனர். 12 வயதுச் சிறுவன் உயிரிழந்தான்.

விபத்தின்போது பொலிஸ் உத்தியோகத்தரும் படுகாயமடைந்தநிலையில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

விபத்துச் சம்பவத்தின் பின்னர், பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது, பொலிஸ் உத்தியோகத்தர் செலுத்தி வந்த ஓட்டோ மோதியே விபத்து ஏற்பட்டதுடன், விபத்தில் படுகாயமடைந்த சிறுவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

சிறுவன் உயிரிழந்ததை அடுத்து ரி.திவாகரன் என்ற பொலிஸ் உத்தியோகத்தரே சுன்னாகம் பொலிஸாரினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். (ஐ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்ப்பாணம், சர்வதேச மாக்சிய குழுவின் ஏற்பாட்டில் "நெருக்கடிக்குப் பின்னரான தேர்தல்கள்" எனும் தலைப்பில் கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிறு மாலை 4 மணிக்கு, 'டீஎம்ஜ' தனியார் கல்வி தொழில் நுட்பப் பிரிவு நிறுவனத்தில் ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறும். சொ.சிவபாலன் ஆரம்ப உரை ஆற்றுவார். (இ)

முன்பள்ளி ஆசிரியருக்கான

## திசைமுகப்படுத்தல் நிகழ்வு இன்று

ஆறுதல் நிறுவனத்தினால் வழங்கப்படும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஒரு வருட டிப்ளோமா பயிற்சி வகுப்பின் திசைமுகப்படுத்தல் நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தியாகி அறக்கொடை நிறுவனத்தில் அமைந்துள்ள சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
பீடங்களுக்கிடையிலான வருடாந்த தடகள விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பீடங்களுக்கிடையிலான வருடாந்த தடகள விளையாட்டுப்போட்டி 19.01.2019 (சனிக்கிழமை) அன்று மதியம் 1.00மணி தொடக்கம் மாலை 6.00மணி வரையும், 20.01.2019(ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 8.30மணி தொடக்கம் மாலை 6.00மணி வரையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பேராசிரியர் J.P. ஜெயதேவன், பீடாதிபதி, விஞ்ஞானபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தடகள பெண்கள் அணியின் முன்னாள் தலைவியும் ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியின் ஆசிரியருமாகிய திருமதி. T. நித்தியா அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பங்குபற்றும் போட்டியாளர்கள் அனைவரையும் உரிய நேரத்திற்கு வருகைதந்து உதவுமாறும், விளையாட்டு ஆர்வலர்களைக் கலந்துகொள்ளுமாறும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி அலகும் விளையாட்டு அவையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றது.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# ஆஸியில் ஒருநாள் தொடரை கைப்பற்றியது இந்திய அணி

மெல்போர்ன்,ஜன 19

மெல்போர்னில் நேற்று நடைபெற்ற ஆவுஸ்ரேலியாவுக்கு எதிரான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில் இந்திய அணி 07 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் விராட் கோலி, ஆஸ்திரேலியாவை துடுப்பெடுத்தடுமாறு பணித்தார்.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணிக்கு தொடக்கமே அதிர்ச்சி காத்திருந்தது. அலெக்ஸ் கேரி (5) புவனேஷ் குமார் பந்தில் ஆட்டமிழந்தார்.

அணித்தலைவர்பிஞ்ச் 14 ஓட்டங்களில் வெளியேறினார். உஸ்மான் காவ்ஜா (34), ஷோன் மார்ஷ் (39), ஹேண்ட்ஸ்கோம்ப் (58) ஆகியோர் சீரான இடைவெளி யில் சாஹல் சுழலில் சிக்கினர்.

பின்னர் வந்த வீரர்கள், பெரிய அளவில் விளையாடவில்லை. சாஹல் தொடர்ந்து, சுழலில் ஆதிக்கம் செலுத்த ஆஸ்திரேலிய துடுப்பாட்டவீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பினர். 48.4 ஓவர்களில் ஆஸ்திரேலிய அணி 230 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இந்திய அணி சார்பில், சாஹல் 6 விக்கெட்டுகளையும், மொகமட் சமி, புவனேஷ் குமார் ஆகியோர் தலா 2 விக் கெட்டு களை கைப்பற்றினர்.

இதையடுத்து, 231 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி தொடக்கத்திலேயே ரோகித் சர்மா(09)வின் விக்கெட்டை இழந்தது.பின்னர் தவானுடன் கோஹ்லி இணைந்தார் இருவரும் நிதானமாக விளையாடியவேளை தவான் 23 ஓட்டங்களுடன் பெவிலி யன் திரும்பினார்.

பின்னர் இரண்டாவது போட்டியில் சிறந்த இணைப்பாட்டம் அமைந்ததைப்போல கோஹ்லியுடன் இணைந்தார் டோனி. முன்னாள், இந்நாள் தலைவர்கள் சிறப்பாக விளையாடி வந்த வேளை 46 ஓட்டங்களைப்பெற்றிருந்த கோஹ்லி றிச்சட்சனின் பந்தில் ஹரேயிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து டோனியுடன் இணைந்தார் கேதர் யாதவ் இந்த இணைப்பாட்டம் இறுதி வரை ஆட்டமிழக்காமல் அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றது.

இறுதியில் 49.2 ஆவது ஓவரில் 03 விக்கெட்டுக்களை இழந்து இந்திய அணி 234 ஓட்டங்களைப் பெற்று 07 விக்கெட்டுக்களால் தோல்வி பெற்றது.

இதில் டோனி 87, கேதர் யாதவ் 67 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றனர்.






ஆஸிக்கு எதிரான டெஸ்ட் தொடர்களில்

# 300 இற்கும் மேற்பட்ட ஓட்டங்களை குவிக்க வேண்டும் - சந்திமால்

பிரிஸ்பேன்,ஜன.19

ஆஸ்திரேலிய அணியுடனான டெஸ்ட் போட்டிகளில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 300 இற்கு மேற்பட்ட ஓட்டங்களை குவித்தால் மாத்திரமே சிறப்பாக செயற்பட முடியும் எனத் தெரிவித்துள்ள இலங்கை அணித் தலைவர் சந்திமால், இப்படியான பெரிய ஓட்ட இலக்குகள் மூலமே பந்துவீச்சாளர்களுக்கு வாய்ப்பு வழங்கி இந்திய அணி போன்று ஒரு சாதனையை ஆஸ்திரேலிய மண்ணில் நிகழ்த்த முடியும் எனக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

எமது இந்த (துடுப்பாட்டத்துறை) பகுதியினையே நாம் முன்னேற்ற வேண்டியிருக்கின்றது. நியூசிலாந்து அணியுடனான இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும், குறிப்பாக இரண்டாவது இனிங்ஸ்களில் நல்ல ஆட்டத்தினையேவெளிப் படுத்தினோம். எங்களுக்கு (இங்கே) துடுப்பாட்டமோ பந்துவீச்சோ ஏதாவது ஒன்றில் சிறப்பான ஆரம்பத்தை காட்ட வேண்டியிருக்கின்றது. நாங்கள் எங்களது கடந்த (டெஸ்ட்) தொடரிலிருந்து பாடம் கற்றிருக்கின்றோம். அதோடு எங்களது வீரர்களும் போட்டித் திட்டங்களுடன் காணப்படுகின்றனர். அவற்றை எமது வீரர்கள் களத்திற்கு கொண்டு வருவார்கள் எனில், அது எங்களுக்கு சிறந்த ஆரம்பத்தினை தரும்.



எமது வேகப்பந்துவீச்சாளர்கள் தற்போது ஒரு ஸ்திர நிலையில் உள்ளனர். எனவே, எங்களுக்கு 300 இற்கு மேலாக ஓட்டங்கள் கிடைக்கும் எனில் அது துடுப்பாட்ட வீரர்களிடம் இருந்து கிடைக்கும் பெரிய விடயமாக அமையும். இந்திய அணியின் பந்துவீச்சுத்துறை (குறிப்பாக 40 இற்கும் 80) இடைப்பட்ட ஓவர்களில் நன்றாக இருந்தது. இதனாலேயே, அவர்கள் ஆஸ்திரேலிய டெஸ்ட் தொடரில் வெற்றி பெற்றிருந்தனர். ஓர் அணியாக இதேமாதிரியான ஒரு விடயத்தை நாமும் செய்ய விரும்புகின்றோம்.

இந்த டெஸ்ட் தொடர் இளம் வீரர்களுக்கு தங்களது திறமையினை வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பமாகும். (இளம் வீரர்கள்) ஆஸ்திரேலிய மண்ணில் ஆஸ்திரேலிய வீரர்களுக்கு எதிராக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவது எதிர்காலத்தில் முன்னேறுவதற்கான தன்னம்பிக்கையை வளர்க்கும். எங்களிடம் ஒரு சிறப்பான விடயம் இருப்பதாக நம்புகின்றோம். அதனை எங்களுக்கு வெளிப்படுத்த முடியுமாயின் நேரான பாதை ஒன்றில் பயணிக்க முடியும்.

ஆஸ்திரேலிய அணி அண்மைக்காலங்களில் ஏற்ற இறக்கங்களை சந்தித்த போதிலும் எப்போதும் சவால்தரக்கூடிய ஓர் அணி என்றார்.

இலங்கை - ஆஸ்திரேலிய அணிகள் இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் பகலிரவு ஆட்டமாக பிரிஸ்பேனில் எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகின்றது

# தனது காதலியை இணையத்தில் அறிமுகம் செய்தார் ரிஷப் பந்த்

மும்பை,ஜன.19

இந்திய கிரிக்கெட் அணியின் இளம் விக்கெட் கீப்பர் ரிஷப் பந்த் இணையத்தளத்தில் இளம் பெண்ணுடன் இருக்கும் புகைப்படத்தை வெளியிட்டு இருக்கிறார்.

இளம் பெண்ணின் பெயர் இஷா என்றும் அவர் ரிஷப் பந்த்தின் காதலி என்றும் தெரியவந்துள்ளது.

ரிஷப்பந்த்தனது பதிவில் 'நான்உன்னை மகிழ்ச்சியாக வைக்க வேண்டும் என்று விரும்புகிறேன். ஏனெனில் நான் மகிழ்ச்சியாக இருக்க நீ தான் காரணம்' என்று குறிப்பிட்டுள்ளார். அதேபோல் அந்த இளம் பெண்ணும் அதே படத்தை சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ளார்.

அதில் 'என்னுடையவர், என் ஆத்மா, எனது சிறந்த நண்பர், எனது வாழ்க்கையின் காதலர்' என்று பதிவிட்டுள்ளார்.



# ஆஸியில் குசல் மெண்டிஸ் காயம் இலங்கை அணிக்குப் பின்னடைவு

பிரிஸ்பேன்.ஜன.19

இலங்கை மற்றும் கிரிக்கெட் ஆஸ்திரேலிய பதினொருவர் அணிகளுக்கு இடையிலான பயிற்சிப் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில், இலங்கை அணியின் மத்தியவரிசை துடுப்பாட்ட வீரர் குசல் மெண்டிஸ், கை விரலில் காயமடைந்துள்ளார்.

ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வீரர் ஜெக் டொரன், டில்ருவான் பெரேரா வீசிய பந்தினை வேகமாக அடிக்க, சோர்ட் லெக் (Short Leg) பகுதியில் களத்தடுப்பில் ஈடுபட்ட குசல் மெண்டிஸ், பந்தினை தலைக்கு படாமல் தடுக்கும் வகையில் கையை வைத்து மறைத்துக்கொண்டார். இதன்போது, பந்து நேரடியாக அவரின் கைவிரலை தாக்கியது, இதன்போது, மிகவும் அதிகமான வேதனையை உணர்ந்த மெண்டிஸ் உடனடியாக மைதானத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.

இலங்கை அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் அஞ்செலோ மத்தியூஸ் உபாதை காரணமாக ஆஸ்திரேலிய தொடரிலிருந்து விலகியுள்ள நிலையில், குசல் மெண்டிஸின் உபாதை இலங்கை அணிக்கு மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.



## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது கொழும்பு விஜேராம இல்லத்தில் வைத்து 'காலைக் கதிர்' நாளிதழ் ஆசிரியருக்கு வழங்கிய இந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:

தமிழர்களுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஓர் அருமையான வாய்ப்பு 2009 இல் யுத்தம் முடிவடைந்த பின்னர் கிட்டியது. அது குறித்துப் பேச வருமாறு சம்பந்தனை அழைத்தேன். அவர் வரவில்லை. தமிழ்க் கூட்டமைப்பு என்னை அப்போது உதாசீனம் செய்து நடந்தமை மூலம் தமிழர் வாழ்வில் மண்ணை அள்ளிப் போட்டது.

இந்த அரசுக்கு அரசமைப்பை மாற்றும் ஆணை கிடையாது. அதனால், புதிய அரசமைப்பைக் கொண்டு வரவும் முடியாது.

அது சாத்தியமற்றது.

இப்போதும் கூட தெற்கில் மக்கள் ஆதரவு எங்கள் பக்கம்தான். அதனைப் புரிந்து ஏற்றுக் கொள்வதற்கு கூட்டமைப்பினர் சம்பந்தனும் சுமந்திரனும் தயாரில்லை.

உங்களின் (பத்திரிகை ஆசிரியரின்) முன்முயற்சியில் நானே சுமந்திரனுடன் பேசினேன். இணக்கத்தை எட்ட வாய்ப்புகள் இருந்தன. எனது பிரதிநிதியாகக் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான டாக்டர் சுரேஷ் பத்திரனவை நான் நியமித்தேன். அது உங்களுக்கும் தெரியும். ஆனால் அந்த உரையாடலைக் கூட்டமைப்புத் தொடரவில்லை. அதில் ஈடுபாடு காட்டவில்லை.

இனி, இந்த நாடாளுமன்றத்தின் கீழ் புதிய அரசமைப்புக் குறித்து பேசுவதில் அர்த்தமில்லை. அதற்கு வாய்ப்பேயில்லை.

பொதுத் தேர்தலின் பின்னர் புதிய அரசு வரட்டும். அதன் கீழ் மீண்டும் முயற்சிகளை ஆரம்பிக்கலாம். நாங்களே எமது நாட்டுக்குள் பேசி தீர்வு காணலாம்.

இப்போது நடைமுறைக்கு வரமுடியாத – சாத்தியப்படாத – ஓர் அறிக்கையை வைத்துக்கொண்டு தமிழ் மக்களுக்கு நாடகமாடுகின்றார் ரணில் விக்கிரமசிங்க.

அரசமைப்பு பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது ஒரு மாதிரி நகல் வடிவம் கூட இல்லை. வெறுமனே அறிக்கைதான். இதுதான் புதிய அரசமைப்புக்கான நகல் வடிவம் என்று ரணிலினால் அறிவிக்க முடியாது. அவர் தெற்குக்கு ஒன்றும் வடக்குக்கு ஒன்றுமாக வெவ்வேறு முகம் காட்டுகின்றார்.

சிங்களத்தில் ஒருபழமொழி உண்டு. பாம்பு வந்துவிட்டது. பக்கத்தில் தடியும் இருக்கின்றது. ஆனால் 'நான் விரதம்' என்று கூறுவது என்பார்கள்.

அது போலத்தான் ரணில் விக்கிரமசிங்க இந்தப் புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான விடயத்தில் நடந்து கொள்கின்றார். அதை, இதைக் கூறுகின்றார். தமிழருக்கு ஒரு படம் காட்டுகின்றார். தெற்கு ஒன்று கூறுகின்றார். ஆனால், தான் ஒரு முடிவு எடுத்து இதுதான்என்று வெளிப்படையாகக் கூற முன்வருகின்றார் இல்லை.

இப்போதும் கூட அரசமைப்புப் பேரவையில் சமர்பிக்கப்பட்ட அறிக்கையில் ஒரு தீர்மானம் இல்லை. தான் ஒரு வடிவத்தை – மாதிரியை – commit – பண்ண அவர் தயாரில்லை.

பாம்பையும் தடியையும் காட்டிக் கொண்டு அவர் தள்ளி நிற்கின்றார். களத்தில் இறங்கி இது தான் தனது நிலைப்பாடு, தங்கள் முடிவு என்று அறிவிக்கவும், முன்வைக்கவும் அவருக்குத் திராணி இல்லை.

இந்த நாடாளுமன்றத்தில் தற்போதைய அரசின் கீழ் புதிய அரசமைப்புக்குவாய்ப்பேயில்லை என்று நன்கு தெரிந்திருந்தும் இன்னும் சாத்தியம் உண்டு என்ற மாதிரி சம்பந்தனும், சுமந்திரனும் தமிழர்களுக்குக் கயிறு கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். இதனைத் தமிழ் மக்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

– இவ்வாறு குறிப்பிட்டார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சுமந்திரன் என்பவர் ஒட்டுமொத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விம்பம் அல்ல. அவர் ஒரு தனிமனிதரே. இவருடைய கருத்துக்களை நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துக்களாகக் கூட ஏற்றுக்கொள்வதில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னும் உயர்ந்த ஸ்தானத்திலேயே இருக்கிறது. கூட்டமைப்புக்கு என்று ஒரு புரிதல் இருக்கிறது.

சுமந்திரன் அடுத்த முறை, ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் தான் நாடாளுமன்றுக்கு வருவார். இதற்காகத் தான் அவர் அச்சுறுத்தும் பாணியில் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார். அவர் தன்னை வீரராகக் காட்டிக்கொண்டாலும் நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதியாகவோ, வடக்கு மக்களின் பிரதிநிதியாகவோ ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. கடந்த காலங்களில் வடக்குக்கு அல்ல, அநுராதபுரத்துக்குக் கூட செல்லாதவர்கள் தான் தற்போது வீரர்களாகத் தம்மைக் காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள் – என்றார். (ஐ)

## மகாநாயக்கர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சருமான அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

புதிய அரசமைப்புக்கான சட்ட வரைவு இன்னும் முன்வைக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

குளியாபிட்டி மேற்குப் பிரதேசத்துக்கான நில செவன அலுவலகத்தை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்றுக் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இதுவரை தயாரிக்கப்படாத அரசமைப்பு தொடர்பாக இல்லாத ஒன்றை கூறியும் நாட்டைக் காட்டிக்கொடுப்பதாகக் கூறியும் ஒரு சிலர் அரசைத் தாக்கிப் பேசுகின்றனர். எனினும் புதிய அரசமைப்புக்கான வரைவு கூட இதுவரை முன்வைக்கப்படவில்லை.

நிபுணர்களினதும் கட்சிகளின் நிலைப்பாடுகளுமே இதுவரை முன்வைக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் புதிய அரசமைப்பைத் தயாரிப்பதற்கு முன்னர் பௌத்த மகா பீடங்களின் அனுமதியை பெற்றுக்கொள்வோம் – என்றார். (ஐ)

## சமஷ்டிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் கூறிய கூற்றை மீண்டும் திட்டவட்டமாகத் உறுதிப்படுத்தியுள்ளார் வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா.

இது தொடர்பில் தான் வெளிப்படுத்திய அறிக்கையையே அண்மையில் ஊடகங்கள் பிரசுரித்தன என்றும், அதனை விளங்காதவர்களே விமர்சனங்களை முன்வைக்கின்றனர் எனவும், ஊடகங்கள் உண்மையையே சொல்லியுள்ளன. ஆதலால் அந்த ஊடகங்களை விமர்சிப்பதில் பயனில்லை என்றும் குறிப்பிட்டார்.

சமகால அரசியல் நிலைமைகள் குறித்து நேற்று யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புதிய அரசமைப்புக்கான நிபுணர் குழு அறிக்கையில் சமஸ்டிக் குணாம்சங்கள் உள்ளன. அது தமிழ் மக்களின் ஒட்டுமொத்த அரசியல் அபிலாஷைகளையும் நிறைவேற்றாவிட்டாலும், அதனை ஒரு தற்காலிகத் தீர்வாக எடுத்துக் கொள்ளலாம் என நானும் கூறியிருந்தேன்.

ஆனால் கடந்த 11ஆம் திகதி அரசமைப்புப் பேரவையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிபுணர் குழுவின் வரைவைச் சமர்ப்பித்து உரையாற்றும் போது, ஐக்கிய தேசியக் கட்சி தற்போதுள்ள அரசமைப்பின் சரத்து 2 மற்றும் சரத்து 9 ஆகியவற்றைப் பாதுகாத்தே புதிய அரசமைப்பைக் கொண்டுவரும் எனவும், நிபுணர் குழு அறிக்கையில் உள்ள விடயங்கள் அப்படியே வரும் என நம்பவேண்டாம் எனவும் கூறியிருக்கின்றார்.

அதன் அர்த்தம் வரப்போகும் புதிய அரசமைப்பு சமஸ்டி குணாம்சங்களைக் கொண்டதாக இருக்கப்போவதில்லை என்பதே. அது ஒற்றையாட்சி அரசமைப்பே என்பது அம்பலமாகியிருக்கிறது. இதனை நான் முன்னரும் கூறியிருக்கும் நிலையில் அதனை வெளியிட்டுள்ள ஊடகங்கள் மீது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்த ஊடகங்கள் உண்மையை அப்படியே எழுதியுள்ளன. அதில் எந்தத் தவறும் இல்லை.

அப்படியிருக்க ஊடகங்கள் மீது விமர்சனங்களை முன்வைத்து பயனில்லை. என்னை யார் வேண்டுமானாலும் விமர்சிக்கலாம். அது அவர்களது உரிமை. ஆனால் எனது கருத்தைப் பிழையாக விளங்கிக் கொண்டால் அது எனது தவறல்ல. கருத்துக்களைக் கருத்துக்களால் எதிர்கொள்ள நான் தயாராக இருக்கின்றேன்.

2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வெளியான வழிகாட்டல் குழுவின் அறிக்கையில் சொல்லப்பட்ட விடயங்கள் ஏற்றுக் கொள்ள கூடியவை என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு அடுத்தபடியாக அதிகளவில் கூறியவன் நான்.

அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட அமைதியாக இருந்தார்கள். எனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தக் கருத்துக்குப் பின்னரும் புதிய அரசமைப்பு சமஸ்டிக் குணாம்சங்களுடன் கூடியதாக வரும் என நம்புவது ஒரு பகல் கனவு மட்டுமே – என்றார்.

தன்போது சிங்கள மக்களை அச்சப்படுத்தாமல் வைத்திருப்பதற்காகவே பிரதமர் உள்ளிட்ட அரசில் உள்ளவர்கள் இவ்வாறு பேசுவதாக கூட்டமைப்பு கூறும் கருத்து தொடர்பாக ஊடகவியலாளர்கள் தவராசாவிடம் கேள்வி எழுப்பியபோது,

பிரதமர் அரசியல் மேடைகளில் கூறிய கருத்து குறித்து நான் கவனம் செலுத்தவில்லை. ஆனால் நான் கூறும் மேற்கண்ட கருத்தைப் பிரதமர் அரசமைப்புச் சபையில் கூறியிருக்கின்றார். சாதாரணமாகக் கருத்துக் கூறுவதற்கே பயப்படுகிறார்கள் என்றால் எப்படி அரசமைப்பை நிறைவேற்றப் போகின்றார்கள்? – என்றார். (ஐ-07)

## கூட்டமைப்புடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், ஒன்றிணைந்து செயற்பட மஹிந்தராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுத்துள்ளனர். இந்த விடயத்தில் நாம் இணைந்து பயணிக்கத் தயாராகவே இருக்கிறோம்.

சாதாரண மக்களின் தேவைக்காகவும், அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்கவும் எந்தவொரு தரப்புடனும் இணைந்து பயணிக்க நாம் தயாராகவே இருக்கிறோம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக உண்மையாகச் செயற்பட்ட ஒரு தலைவர் மஹிந்த தான் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முதலில் தெரிந்து கொள்ளவேண்டும்.

அவரது காலத்தில் தான் வடக்கு மாகாணத் தேர்தல் இடம் பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி 1987 ஆம் ஆண்டுமுதல் இருந்தாலும், வடக்கு தேர்தலை நடத்த முடியாமல் தான் காணப்பட்டது – என்றார். (ஐ)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் இந்தக் காணிகள் விடுவிக்கப்படவுள்ளன.

இதன்படி எதிர்வரும் திங்கட்கிழமை கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் உள்ள பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்படவுள்ளன.

கிளிநொச்சியில் 972 ஏக்கர் காணிகளும், முல்லைத்தீவில் 120 ஏக்கர் காணிகளும், யாழ்ப்பாணத்தில் 46 ஏக்கர் காணிகளும் பொதுமக்களிடம் கையளிக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசியக் கட்சி பல காரணங்களைக் காரணம் காட்டி தேர்தல்களைப் பிற்போடுவதற்கு முயற்சி செய்து வருகின்றது. இது தேர்தல் தொடர்பாக அந்தக் கட்சிக்கு எழுந்துள்ள தோல்விப் பயமே ஆகும்.

ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் இவ்வாறு செயற்படுமாக இருந்தால் நாம் இது தொடர்பாக முக்கியமான தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பிரச்சினை இருக்கிறது. எமக்கும் இந்த விடயத்தில் பிரச்சினையொன்று இருக்கின்றது.

ஒவ்வொரு தரப்பினரும், ஒவ்வொருவரின் பெயரை ஜனாதிபதி வேட்பாளராகக் கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற வகையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைத் தான் களமிறக்க வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறோம்.

கோட்டாபய, மக்கள் தயார் என்றால் தானும் ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயார் என்று கூறியுள்ளார். நானும், அவ்வாறே கூறுகிறேன். ஜனாதிபதித் தேர்லுக்காக வேலை செய்வதற்கு மக்கள் தயார் என்றால் நானும் தயார்.

கோட்டாபய எந்தவொரு இடத்திலும் வேட்பாளராகத் தயார் என்று கூறவில்லை. ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் இப்போது அவசரப்படவேண்டிய அவசியமில்லை – என்றார். (ஐ)

## எதிர்க்கட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற மத வழிபாடுகளைத் தொடர்ந்து சம்பிரதாயபூர்வமாக அவர் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

எதிர்க்கட்சி தலைவராக மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்ட போதிலும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரான இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தை ஒப்படைக்காத நிலையில் புதிய எதிர்க்கட்சித் தலைவர் கடமைகளைப் பொறுப்பேற்பதில் தாமதம் நிலவி வந்தது. மஹிந்த தற்போது அலுவலகத்தைப் பொறுப்பேற்று கடமைகளை ஆரம்பித்துள்ளார். (ஐ)

## சுமந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரனின் படத்துக்கு நிறப்பூச்சு (பெயின்ட்) பூசப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் கம்பெரலிய அபிவிருத்தி யுத்தம் என்னும் தொனிப்பொருளின் ஊடாக வடமராட்சி கொட்டடி சித்தி விநாயகர் ஆலயக் கேணி, பருத்தித்துறை நீதிமன்ற வீதி ஆகியன சீரமைப்பு செய்யப்பட்டன. சீரமைப்பு செய்யப்பட்ட கேணி மற்றும் வீதி ஆகியன மக்கள் மயப்படுத்தப்பட்ட பின்னர் அது தொடர்பான பதாகைகள் அருகில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பதாகையைக் கடந்த புதன்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம் . ஏ.சுமந்திரன் திரைநீக்கம் செய்து வைத்தார். அந்தப் பதாகையில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் ஆகியோரின் படங்களும் காணப்பட்டன.

அதில் நேற்று முன்தினம் இரவு இனம்தெரியாத நபர்கள் நாடாளுமன்ற உறுப்பினரின் படத்தின் மீது வர்ணப் பூச்சு (பெயின்ட்) பூசி அவரது படத்தை மறைத்துள்ளார்கள்.

இந்தப்பதாகையில்எம்.ஏ.சுமந்திரனின் படம் காணப்பட்டமை சமூக வலைத்தளங்களில் விமர்சனங்களுக்கு உள்ளாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-07)

# சீனாவிடம் வாங்கிய கடனை இந்தியா மூலம் அடைப்போம்



## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 19

மத்தள விமான நிலையத்தை அமைப்பதற்காக மஹிந்த ராஜபக்ஷ அரசால் சீனாவிடம் பெறப்பட்ட கடன், இந்தியாவின் விமான நிலைய அதிகார சபையின் உதவியுடன் மீளச் செலுத்தப்படவுள்ளது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஒக்ரோபர் 26ஆம் திகதி உருவாக்கப்பட்டு 51 நாட்கள் பதவியில் இருந்த மஹிந்த ராஜபக்ஷ அரசால் நாட்டுக்குப் பெரும் பொருளாதார பின்னடைவு ஏற்பட்டுள்ளது. ராஜபக்ஷவினரால் உருவாக்கப்பட்ட கடன் சுமையை, அம்பாந்தோட்டைத் துறைமுகக் கடன் அடைக்கப்பட்டது போல, புதிய அரசு தீர்த்து வைக்கும்.

மஹிந்த ஆட்சிக்காலத்தில் மத்தள விமான நிலையத்தை அமைப்பதற்காகச் சீனாவிடம் இருந்து பெறப்பட்ட கடனை அடைப்பதற்கு, இந்தியாவின் விமான நிலைய அதிகார சபையின் உதவி கோரப்பட்டுள்ளது.

போர் முடிவுக்கு வந்த பின்னர் அக்குரேகொடவில், பாரிய பாதுகாப்பு தலைமையகக் கட்டடத்தைக் கட்டுவதற்கும், சிறிலங்கன் விமான சேவைக்குத் தேவையின்றி விமானத்தைக் கொள்வனவு செய்வதற்கும் பில்லியன் கணக்கான ரூபா செலவிடப்பட்டது.

அதற்குச் செலவிடப்பட்ட நிதியை கல்வி, சுகாதாரம் போன்ற அவசிய தேவைகளுக்குவிசெலவிட்டிருந்தால், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைத் தவிர்த்திருக்க முடியும்–என்றார். (ஐ)

# ஆயிரத்து 500 பேருக்கு ஆசிரியர் நியமனங்கள்

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன. 19

எதிர்வரும் மாதங்களில் ஆயிரத்து 500 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட மாணவர்களுக்கு பாடசாலைச் சீருடை மற்றும் பாதணிகள் என்பன கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது, கல்விச் செயற்பாடுகள் மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை என்பன தொடர்பாகவும் இராஜாங்க அமைச்சர் கவனம் செலுத்தினார்.

அதற்கமைய எதிர்வரும் மாதங்களில் ஆயிரத்து 500 ஆசிரியர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் உறுதியளித்தார். (ஐ)

# மஹிந்த மீது விஜயகலா பரபரப்புக் குற்றச்சாட்டு!

கொழும்பு, ஜன. 19

போர் முடிந்த பின்னர் மஹிந்த ராஜபக்ஷ அரசினாலேயே வடக்கு, கிழக்கில் போதைப்பொருள் பாவனை அறிமுகப்படுத்தப்பட்டதாக கல்வி இராஜாங்க அமைச்சர் விஜேயகலா மகேஸ்வரன் குற்றம்சாட்டியுள்ளார்.

கொழும்பு இந்துக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் அனைத்து மாணவர்களுக்கும் சட்டக்கல்வியை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் சட்டக்கல்வி மூலம் மாணவர்கள் எதிர்காலத்தில் தமது பிரச்சினைகளுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பது தொடர்பில் தெளிவான முடிவை எடுப்பார்கள் என்றும் அவர் கூறினார். (ஐ)

# லசந்த கொலை, கீத் நொயார் கடத்தல் ஒரே மாதிரியாக திட்டமிடப்பட்டவை!

## குற்ற விசாரணை திணைக்கள அதிகாரிகள் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 19

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை மற்றும் நேசன் பத்திரிகை இணை ஆசிரியர் கீத் நொயார் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட சம்பவம் ஆகியன ஒரே விதமாகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளவை என்று குற்ற விசாரணை திணைக்கள அதிகாரிகள் நேற்றுமுன்தினம் கல்கிஸை பிரதம நீதிவான் முஹம்மட் மிஹாலுக்குத் தெளிவுபடுத்தினர்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை சம்பந்தமாக இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ள ஐந்து கையடக்கத் தொலைபேசிகளின் அறிக்கை அவசியமெனப் புலனாய்வுப் பிரிவு அறிவுறுத்தியது.

எனினும் மேற்படி அறிக்கை இதுவரை தமக்குக் கிடைக்கவில்லையெனவும் அந்த அறிக்கையை உடனடியாகக் கிடைக்கச் செய்யும்படியும் அந்த அறிக்கைக்கிணங்க விசாரணைகளை விரைவாக முன்னெடுக்க எதிர்பார்ப்பதாகவும் குற்ற விசாரணைத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்திடம் தெரிவித்தனர்.

லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள முதலாவது சந்தேக நபரான இராணுவப் புலனாய்வு பிரிவின் சார்ஜன்ட் மேஜர் பிரேமானந்த உதுலாகம, இரண்டாவது சந்தேக நபரான கல்கிஸை குற்றத்தடுப்புப் பிரிவு நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் திஸ்ஸ சுகதபால மற்றும் மூன்றாவது சந்தேக நபரான முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் பிரசன்ன நாணயக்கார ஆகியோர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். (ஐ)

# முல்லைத்தீவில் விஜயகலா



முல்லைத்தீவு, ஜன. 19

உடையார்கட்டு மகாவித்தியாலயத்துக்குச் சென்ற கல்வி ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அங்கு இடம்பெற்ற பொங்கல் நிகழ்வில் கலந்துகொண்டார்.

நேற்றுக் காலை முல்லைத்தீவு மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்ட கல்வி ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உடையார்கட்டு மகாவித்தியாலயத்துக்குச் சென்று அங்குள்ள குறைகளைக் கேட்டறிந்துகொண்டார்

அத்தோடு பாடசாலை நிர்வாகத்தால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய அந்தப் பாடசாலையில் அத்திபாரம் போடப்பட்ட நிலையில் காணப்படும் இடத்தில் கட்டடம் ஒன்றை அமைத்துத் தருவதாகவும் உறுதியளித்தார்

தொடர்ந்து பாடசாலையில் இடம்பெற்ற தைப்பொங்கல் நிகழ்விலும் பங்கேற்றார்.

அத்துடன், கற்சிலைமடு பண்டாரவன்னி மகாவித்தியாலயத்துக்குக் கல்வி ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நேற்றுக் காலை விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் வரவேற்கப்பட்ட அமைச்சர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள், இரண்டு சீருடை துணிக்கான வவுச்சர் என்பவற்றை வழங்கினார். (ஐ)

# தமிழக அறிஞர் பலரின் பங்கேற்புடன் நல்லூரில் சிலப்பதிகார விழா ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 19



யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் தமிழ்நாடு தமிழ்ஐயா கல்விக் கழகமும் தமிழ் ஆடற்கலை மன்றமும் இணைந்து நடத்தும் இருநாள் சிலப்பதிகார முத்தமிழ் விழா நேற்று வெள்ளிக்கிழமை நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் கோலாகலமாக ஆரம்பமாகியது.

தமிழகத்தில் இருந்து விழாவிற்கென வருகை தந்த 25 பேராசிரியர்கள் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தாரால் நல்லூர் கந்தசுவாமி கோவில் வாயிலில் இருந்து நாகதீபன் குழுவினரின் மங்கல இசையுடன் அழைத்துவரப்பட்டனர். வரவேற்பு ஊர்வலத்தில் இந்தியத் துணைத் தூதுவர், நல்லை ஆதீன முதல்வர் யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து நேற்றுக் காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றது காலை அமர்வில் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக மாணவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்து இசைத்தனர்.

யாழ். பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் கிருபாசக்தி கருணா சிலப்பதிகார வாழ்த்து இசைத்தார். தமிழ்ச்சங்கச் செயலாளர் இ.சர்வேஸ்வரா வரவேற்புரையையும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரையையும் இந்தியத் துணைத்தூதர் சங்கர் பாலசந்திரன் வாழ்த்துரையையும் வழங்கினர்.

தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் பல்கலைக்கழக சிறப்பு நிலைப் பேராசிரியர் முனைவர் சு.நரேந்திரன் சிறப்புரையாற்றினார். திருவையாறு அரசர் கல்லூரி மேனாள் முதல்வர் முனைவர் செல்வகணபதி தலைமையில் சிலப்பதிகாரக் காப்பியமும் கதைமாந்தரும் என்ற தலைப்பில் மகளிர் அரங்கு இடம்பெற்றது.

இதில் வசந்தமாலை என்ற பொருளில் தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் முனைவர் எப்.தீபாவும் கவுந்தியடிகள் என்ற பொருளில் தமிழ்ப்பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் முனைவர் எஸ்.கற்பகமும் மாதரி என்ற பொருளில் தமிழ்ச்சங்க உபதலைவர் முனைவர் மனோன்மணி சண்முகதாசும் கருத்துரைகளை வழங்கினர்.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் ஆசிரிய மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-07)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.